திராவிடநாடு

—4—62 | வார வெளியீடு | விலை 16 காசு

நிலைமாறிடோம்!

[G. K. மூர்த்தி]

★

இன்பத் திராவிடம் காண்பதுவே நம்
இலட்சிய மாகுமன்றோ! அது
கன்னட கேரள ஆந்திர தமிழ்
நான்கு சேர்ந்தது யன்றோ!
இன்னல்கள் யாவும் கூடிவந்தாலும்
இன்னுயிர் ஈந்தும் அடிமை விலங்கு
ஒடிபடச் செய்வ மன்றோ! (இன்பத்)

காவிரி நீரில் நெல்மணி யாவும்
விளையும் நிலமில்லையா........அங்கு
பூவிரித் தாடும் சோலைகள் யாவும்
போற்றும் வளமில்லையா........ (இன்பத்)

எத்திப் பிழைப் போர்கள்
ஏசித் திரிந்தாலும்
என்றும் நிலையாறிடோம்........வடவர்
நச்சுப் பிடிமாறி
நந்தம் அரசாக்க
நாளும் போராடுவோம்........ (இன்பத்)

வாழ்ந்த குடி

—[கனகு]—

கார்த்தி அவன் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை. முதலில் சிரித்தான் அவனைப்பார்த்து. வாசுவினதை ஒத்த வயதினன்தான் கார்த்தி. ஆயினும் தன் சுற்றுச் சார்புகளையும், சூழ்நிலைகளையும் கொண்டு, உலகைச் சரியானபடி கணித்துப் பார்த்து, உள்ளத்தே இருத்திக்கொண்டிருந்தான் அவன். அவனிடத்தே அமைந்துவிட்ட வாழ்வு நிலையும் அதற்கு உறுதுணையாக நின்றது. அவனுடைய வேட்கையும் அதற்குச் செவ்வனே உதவி புரிந்தது.

"பட்டணத்தின் பகட்டிலும், வெளிச்சத்திலும், பணத்திலும், பவிசிலும் உலவிக்கொண்டிருந்த ஒருவன், திடுதிப்பென்று, நாகரிகம் தெரியாத காட்டுமிராண்டிகள் வாழ்கின்ற பகுதிக்கு வந்துவிட்ட நிலையிலிருக்கின்றாய் நீ! அதனால்தான் உன் உள்ளம் குழம்புகிறது. மனிதனுடைய ஆற்றல் இருக்கின்றதே, அது வளையாதது; சளைக்காதது; தோல்வியே அடையாதது. திரும்பத் திரும்ப ஒரு செயலைச் செய்வதன் மூலம் மனிதன் தன் ஆற்றலின் பெருமையைக் காட்டுகிறான்; உயர்வைக் காட்டுகிறான்; வலிமையைக் காட்டுகிறான். இயற்கை நியதி, இயற்கைக் கோள்—என்ற—மனித நிலைக்கு, அறிவுக்கு, செயலுக்கு அப்பாற்பட்ட, பெருவலியுடைய ஆற்றல் ஒன்று இருக்கின்றதுதான். அதுவேறு. இதுவேறு. இதைப்பற்றிப் பேசும்போது அந்த ஆற்றலைக் குறைத்துப் பேசுவதாகச் சிலர் கருதிக்கொள்கிறார்கள். அந்தக் கருத்துக்கு இங்கு இடமில்லை. அதேபோல் அதைப்பற்றிக் கூறும்போது இதைக் குறைத்துக் கூறுவதற்கு இங்கு வழியே கிடையாது. 'ஊழையும் உப்பக்கம் காண்பான்' என்று வள்ளுவப்பெருந்தகையே கூறியிருக்கிறார். அப்படி அவர் கூறியதன் மூலம் இயற்கை விளைவையே குறைகூறுகிறார் என்றோ, இழித்துக் கூறுகிறார் என்றோ எடுத்துக்கொள்ள வேண்டாம். யாராவது அப்படிப் பொருள் கொள்வதாயிருந்தால், அது வலிந்து கொள்ளும் பொருளாகத்தான் இருக்க முடியும். மனிதனுடைய உண்மையான ஆற்றலை அந்தக் கருத்தின் மூலம் வள்ளுவப் பெருந்தகை விளக்கிக் காட்டுகிறார். மாந்தரின் ஆற்றல் இத்தகையது என்று அவர் எடுத்துக்காட்டுகிறார். அவ்வளவு சிறப்பு வாய்ந்தது இந்த மனித ஆற்றல். தோல்வி என்பது என்ன தெரியுமா? தயக்கத்தின் மற்றொரு பொருள்தான் தோல்வி. அச்சம், நம்பிக்கையின்மை, தளர்ச்சி இவையெல்லாம் தோல்வியின் வேறுவேறுபொருள்கள். நீ இன்றைய மக்களின் நிலைகண்டு, அவர்களை எப்படி உயர்வுக்குக் கொண்டுவருவது என்று கலங்குகிறாய்; அஞ்சுகிறாய். அந்த அச்சம் வீண் அச்சம். அந்தக் கலக்கம் வீண் கலக்கம்.

"மாந்தரின் உயர்வுக்காகப் பாடுபட்ட மாந்தருள் மாணிக்கங்கள் தாம் புத்தரும், ஏசுவும். 'அடேயப்பா இவ்வளவு பெரிய உலகை நம் ஒருவனால் திருத்திவிட, உய்வித்துவிட முடியுமா?' என்று அவர்கள் மலைத்திருந்தால், இன்று அவர்கள் எல்லாம் வழிபாட்டுக்குரியவர்களாகியிருப்பார்களா?

"மனிதனுடைய மடைமையைப் போக்குவதற்கென நல்ல பல கருத்துக்களை எடுத்துக்கூறினார் சாக்ரடீஸ். வலிமை மிக்கதொரு பேராட்சியே அவருக்கு எதிராக நின்றது. 'நீ நல்லதைச் சொல்வதை நிறுத்திக்கொள். உன் மட்டிலும் உள்ள நன்மையை நீ பார்த்துக்கொள். இன்னும் வேண்டுமானால், உனக்கு வேண்டியவர்களின் நன்மையை மட்டும் நீ பார்த்துக் கொள்! உலகுக்கெல்லாம் உண்மை கூற நீ முற்படாதே! நாடு முழுதுக்கும் நல்லது செய்ய நீ முற்படாதே! நீ விரும்புகின்ற வாய்ப்புகளையெல்லாம் நாங்கள் அளிக்கிறோம். உன் தேவைகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம்!' என்று நயந்து கூறியது, நயந்து வேண்டியது நாட்டையாண்ட பேரரசு. 'என் நன்மை மட்டும் எனக்குப் பெரிதல்ல. எனக்கு வேண்டியவர்களின் நலம் மட்டும் எனக்குப் பெரிதல்ல. அவற்றை விழைந்து, வேண்டி நான் நின்றது கிடையாது; நிற்கப்போவதில்லை. உலகு உய்ய வேண்டும். நாட்டில் நலிந்துகிடப்போரின் நிலை சிறக்கவேண்டும். உலகில் கவிந்து கிடக்கும் அறியாமையென்னும் காரிருள் அகலவேண்டும்!' என்று அடித்துச் சொன்னார் சாக்ரடீஸ். மனத்தில் உள்ள கருத்தை அப்படியே வெளியிட்டதற்காக அவரிடத்தில் நச்சுக் கோப்பையைக் கொடுத்து, — அந்த நஞ்சினை உண்ணுமாறு செய்தது அந்த நாட்டுக் கொடுங்கோலரசு. சாக்ரடீஸ் அஞ்சினாரா? மகிழ்ச்சியோடு நஞ்சினை உண்டார். அதன் விளைவு! மக்கள் விழிப்பெய்தினர். உண்மையை உணர, நல்வழி நடக்க உந்தப்பெற்றனர்.

"நம்நாட்டு வரலாற்றை எடுத்துக் கொண்டால், பழங்காலந்தொட்டு வீரவுணர்வுதான் அதில் மிகுந்திருப்பதைக் காண்கிறோம். ஆங்கிலேயன் இந்த நாட்டுக்குள் நுழைந்தான். அவன் ஆட்சியின் தொடக்கத்தோடு இந்த நாடு அடிமைக்காடாகிவிட்டது. ஆயினும் ஆங்கிலேயனை இந்தத் துணைக்கண்டத்திலிருந்து வெளியேற்றுவதற்கு தமிழகம் நடத்தியதுபோன்றதொரு போராட்டம் வேறெங்கும் நடந்தது கிடையாது. வீர சிதம்பரனார்—கப்பலோட்டிய தமிழன் ஆங்கிலேயனை வெளியேற்ற எடுத்துக்கொண்ட பங்கு மிகப் பெரியதாகும். இந்த நாட்டு மக்கள்பால் அவர் காட்டிய அன்பு அளவிடற்கரியதொரு பேரன்பு. இந்த நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

முன்யோசனை இல்லாத அரசு

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (1—4—62 தனிப்பிரதி 16 காசு [இதழ் 3

இப்போது ஆளுங்கட்சியாக அமையும் வாய்ப்பினைப் பெற்றுள்ள காங்கிரசுக் கட்சிக்கு முன்யோசனை இல்லை என்று நாம் கூறினால், அப்படிக் கூறுவது கட்சிகளுக்கிடையே இயற்கையாக உள்ள காழ்ப்புக் காரணமாகக் கூறப்படுவது என்பதாக முன்யோசனை இல்லாத சிலர் கருதக்கூடும்.

ஆனால், அந்தக் கருத்தை நாம் கூறவில்லை. நமக்கு எந்தக்கட்சியினிடத்தும் காழ்ப்போ, வெறுப்போ, பகையோ இருப்பதில்லை—இருக்கக் காரணமுமில்லை.

எந்தக் கட்சியானாலும், அது, நாட்டுக்கு நல்லதைச் செய்யுமானால்; அந்தக் கட்சியைப் பாராட்டுவோம்—பல தடவைகளில் பாராட்டியும் இருக்கிறோம்.

யார் ஆட்சிப்பீடத்தில் அமரும் வாய்ப்பினைப் பெற்றாலும், அவர்களால் நாடு நலம்பெற வேண்டுமென்பதே நமது விருப்பமும் வேண்டுகோளுமாக இதுவரை இருந்து,ஆளுங்கட்சி செய்யும் நல்ல காரியங்களை ஆதரித்துப் பாராட்டியும், தீய செயல்களில் ஈடுபடும்போது கண்டித்துமிருக்கிறோம்.

ஜனநாயகப் பண்பு தெரிந்தவர்கள் கையாள வேண்டிய முறையும் இதுதான்.

ஆனால், ஒன்று, ஒருவன் உண்ணும் உணவில் மண் போடுவதுபோல், ஆளுங்கட்சியை எப்படியாவது வீழ்த்திவிட்டு அதில்போய் நாம் அமர்ந்து ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதற்காக எந்தக் குறுக்கு வழியையும் நாம் பின்பற்ற மாட்டோம். அப்படிச்செய்வது ஜனநாயகமுமாகாது.

எந்த ஒரு செயலையும் மக்களின் ஆதரவோடும் முன்யோசனையோடும் காரியமாற்றுபவர்களுக்குக் குறுக்கு வழி தேவையில்லை.

யார் நல்லவர்—நல்லது செய்யக்கூடியவர் என்பதை அறியும் பொறுப்பும் வாய்ப்பும் பொதுமக்களிடம் இருக்கிறது. அவர்களாகப் பார்த்து அந்த நல்லவர்களிடம் பொறுப்பினை ஒப்படைக்கிறார்கள்.

ஆனால், இந்த நல்லமுறை இன்னும் இந்த நாட்டுக்கு ஏற்படவில்லை.

இங்குள்ள மக்கள் நல்லது செய்வதற்குப் பயன்படுவது பணம் ஒன்றுதான் என்றும், நல்லது செய்யக்கூடியவர் பணக்காரர்தான் என்றும் இன்னமும் நம்பிக்கொண்டு இருக்கும் ஒரு இரங்கத்தக்க நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதனால், பண்பு பட்டுப்போகிறது—மக்களாட்சி முறை மடிந்து போகிறது.

இந்த நிலையில், ஆட்சிப் பொறுப்பில்அமருபவர்கள், எந்தக் காரியத்தைச் செய்தாலும், கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்ற துணிவில் முன்யோசனையின்றிச் செய்ய முற்பட்டு விடுகிறார்கள். அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்களுக்குத்தான் முன்யோசனையில்லையே! எப்படி எண்ணிச் செயல்பட முடியும்?

எனவே பணம் பாழாவது தாராளமாக நடைபெறுகிறது. மக்கள் தரும் வரிப்பணம் விழலுக்கு இறைத்த நீராகி வீணாகிறது.

இந்த முறை கேடான—ஒழுங்கற்ற ஆட்சியைத்தான் முன்யோசனையற்ற ஆட்சி என்று எடுத்துக்காட்டி, இனிமேலாவது எந்தக் காரியத்தைச் செய்யப்புகுந்தாலும், சிறிதளவாவது முன்யோசனையோடு செய்யுங்கள் என்று புத்தி கூறியிருக்கிறது அந்த ஏடு.

சர்க்காரால் கட்டப்படும் கட்டிடங்கள் அத்துறையில் உள்ள நிபுணர்களைக் கலந்தாலோசித்துச் செய்யப்பட வேண்டும் என்றும்,

எந்தத் தேவைக்கு எந்த அளவு கட்டிடம் தேவையென்றும்,

எந்தக் கட்டிடத்துக்கு எந்தவிதமான தளவாடங்கள் தேவையென்றும்,

கட்டப்படுகின்ற கட்டிடம் எதற்காகக் கட்டப்படுகிறதென்றும்,

முன்கூட்டியே தெரிந்து செய்யப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை ஆளுங்கட்சிமீது சுமத்தி 29-3-62-ல் வெளிவந்த சுதேசமித்திரன் ஏடு ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. மேலும், அந்தத் தலையங்கத்தில்,

> “இதுவரை எழுப்பப்பட்டுள்ள பல பொதுக் கட்டிடங்கள் மேற்குறித்த கண்ணோட்டத்தோடு கட்டப்பட்டவையன்று. அத்தகைய கட்டிடங்களில் உள்ள இடம் போதியளவு பயன்படுத்தப்படவில்லை; அல்லது அங்கு நடக்கும் வேலைக்கு அந்த இடத்தின் அமைப்பு முற்றிலும் பொருத்தமாயில்லை”

என்று எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஆளுங்கட்சியினர் எந்தக்காரியத்தை மேற்கொண்டாலும் முன்யோசனையின்றி அந்தக் காரியத்தில் இறங்கிவிடுகின்றனர் என்பதற்கு மேற்கோளாக இந்த ஒன்றை அந்த ஏடு எடுத்துக்காட்டி இடித்துரைத்து, இனிமேலாவது சிறிதளவு முன்யோசனையுடன் காரியமாற்ற முற்படுங்கள் என்று முன்யோசனை கூறியிருக்கிறது.

ஆனால், ஆளுங்கட்சி இதுவரை முன்யோசனையின்றிச் செய்த காரியங்கள் ஏராளம் உள்ளன. அவ்வப்போது தணிக்கைக் குழுவினர் எடுத்துக்காட்டும் புள்ளிவிபரங்களைப் பார்த்தாலே போதும். என்றாலும், ஆளும் திறமை எங்களுக்குத்தான் உண்டு என்று எக்காளமிட்டபடி பவனிவருகிறது ஆளுங் கட்சியான காங்கிரசு.

எனவே, இந்தப் போக்கினைத் திருத்தும் பொறுப்பும், திருத்தமுடியாவிட்டால் ஆட்சியை மாற்றும் பொறுப்பும் பொதுமக்களிடம்தான் இருக்கிறது என்பதனை எடுத்துக்காட்டி விளக்கத்தேவையில்லை. ✻

2-ம் பக்கத் தொடர்ச்சி

டின் விடுதலைக்கென அவர் காட்டிய ஊக்கம் யாரும் காணுதற்கரிய ஊக்கம். அவர் நடத்திய போராட்டம் எதிரியும் மலைக்கத்தக்கதொரு போராட்டம். ஞாயிற்றின் பேரொளியே மறையாத வண்ணம்—மறையாத அளவு ஞாலமெங்கணும் பரவிக் கிடந்தது அந்தப் பேரரசாட்சி. அந்தப் பேரரசாட்சியையே எதிர்த்துப் போர்முரசு கொட்டினார் சிதம்பரனார். அதனால் அவர் பட்ட துன்பங்கள் கொஞ்சமா? துயரங்கள் கொஞ்சமா? செக்கிழுத்தார்; கல்லுடைத்தார். பல்வேறு வகைப்பட்ட அவதிகளை அடைந்தார். ஆயினும் அவர் உறுதி குன்றினாரா? நாட்டு மக்களின் உய்வே நோக்கமாகக் கொண்டு அவர் திட்டமாக நின்றார். கடைசியில் தம் உயிரையே விடுதலைக்காகக்கொடுத்தார். இவ்வளவு அரும்பாடுபட்டும் அவர் விடுதலையைக் காணவில்லை. அவர் வழி வந்த நாம் இன்னும் அடிமையாகவே இருக்கின்றோம். ஆங்கிலேயன் என்னவோ இந்த நாட்டைவிட்டு அகன்றுவிட்டான். அவனுக்குப் பிறகு நம்முடைய கண்மூடித்தனத்தால், அறியாமையால் வேறொரு வல்லாட்சியை, அந்நிய ஆட்சியை இங்கு ஏற்றுக்கொண்டுவிட்டோம்—இந்திய அரசு என்ற பெயரில். இந்தியரல்லாத இந்த நாட்டு மக்கள் தம் அறியாமை காரணமாகத் தம்மை இந்தியர் என்று அழைத்துக் கொள்கிறார்கள்! வெட்கக்கேடு! இந்திக்காரனின் ஆட்சி நம்மவர் ஆட்சி, நம்மவர் ஆட்சி என்று பெருமைபட்டுக் கொள்கிறார்கள்! அறியாமை!

"ஆங்கிலேயனிடமாவது நியாயமிருந்தது. சிந்திக்கும் ஆற்றல் இருந்தது. உண்மைக்கும் இன்மைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உணர்ந்துகொள்ளும் தன்மையிருந்தது. இந்த இந்திக்காரரிடத்திலோ வல்லாட்சியைத் தவிர வேறு எதுவும் கிடையாது. கொடுங்கோன்மையைத்தவிர,வேறு எதுவும்கிடையாது; அநியாயஆட்சி புரிவதையே சிறப்பான ஆட்சி என்று கூறும் வீம்புப் பேச்சையும், வெற்றுரையையும் தவிர நல்லுரை ஏதும் கிடையாது.

இந்த நிலையில் இந்த நாட்டில் எழும்பரிதிஅதோ தோன்றிக்கொண்டிருக்கிறான். அந்தப் பரிதியொளியோடு,அதோ அறிவொளியும்கலந்து எங்கணும் பரவிக்கொண்டு வருகிறது அந்த அறிவொளி காட்டும் நல்வழியில் நாம் மட்டும் செல்வதோடு நம் கடன் முடிந்துவிடவில்லை. அந்த அறிவொளியைக் காணக் கூசுவோர் சிலர் இருப்பர். அவர்கள் கண்ணிலே உள்ள கூசுகின்ற தன்மையை உடைய கோளாறை நாம் போக்கவேண்டும். கூசுதல் சிறிதுமின்றிக் கண்களை நன்றாகத் திறந்துகொண்டு அவர்கள் பார்க்குமாறானதொரு நிலையினை நாம் உண்டாக்கவேண்டும். அந்த அறிவொளி காட்டுவது யாது என்று சிலர் அறியாதிருப்பர். அத்தகையோரிடத்து அந்த அறிவொளி காட்டும் நல்வழியை நாம் எடுத்துச் சொல்வது, அவரையெல்லாம் நல்வழி அழைத்துச் செல்வது நம் தலையாய கடன். அப்படி எடுத்துச் சொல்வதன் மூலம்,அழைத்துச்செல்வதன் மூலம் நாட்டிலுள்ள நலிவின் காரணத்தை அவர்கள் எல்லாம் உணருமாறு நாம் செய்கிறோம். உள்ளதை உள்ளவாறு நாட்டு மக்கள் உணர்ந்துகொள்வதுதான் இன்று நாம் உய்வு பெறுவதற்கான முதற்படி;—நாம் விடுதலை நோக்கி எடுத்து வைக்கும் முதலடி. எல்லார் மாட்டும் இவற்றை எடுத்துச் சொல்வதும், சொல்லப்பெற்றோர் எல்லாம் உணர்ந்துகொள்ளுமாறு செய்வதும் பெரிய வேலைகள்தாம் — மிகப் பெரிய வேலைகள். ஆனால், அவை அரிய வேலைகள் அல்ல, அல்ல அல்ல! அதிலே மலைப்பதற்கு இடமே கிடையாது; இல்லை! தயங்குவதற்கு ஆறு கிடையாது; இல்லை! 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லுமே அசைவிலா ஊக்கம் உடையான் உழை' என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளதை மனத்திலிருத்திக்கொண்டால், ஆக்கம்—அதாவது வெற்றி—பெற்றேதான் தீரவேண்டும் என்ற உறுதியும் இருந்துவிட்டால்,எண்ணியதை எண்ணியபடி இயற்றியே முடித்துவிடலாம். இன்று நம்முன், —இந்த நாட்டு மக்கள் முன் தோன்றக் கிடப்பது ஒரே ஒரு வழிதான். அதுதான் நம் நாட்டுக்கு விடுதலை காணும் வழி! உய்வு வழி! வெற்றி வழி!

கார்த்தி நீண்டதொரு சொற்பொழிவே ஆற்றிவிட்டான். அவன் கூறிய ஒவ்வொரு சொல்லையும் கூர்ந்து, ஆழ்ந்து, உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தான் வாசு. சடசடவென்று பெய்துகொண்டிருந்த மழை திடீர் என்று ஓய்ந்தது போல் அவன் தன் பேச்சை நிறுத்தியதும் அங்கே அமைதி நிலவியது.

இப்படிப் பலநாட்கள் வாசுவும், கார்த்தியும் தங்களுக்குள் உரையாடி, உரையாடி அறிவு விளக்கம் கண்டுகொண்டு, பெற்றுக்கொண்டு வந்தனர். நாளடைவில் அவர்கள் அறிவுப்பணியில் தீவிரமாக முனைந்து ஈடுபட்டனர். அந்த வட்டாரத்தின் பொதுத்தொண்டின் தலைசிறந்தவர்கள் அவர்களே ஆயினர்.

4. கள்ள உள்ளம் மெள்ள நுழைந்தது!

ஒரு நாள், வாசு தன் வீட்டுவாயிலை அடைந்தபோது உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. அவன் செவியிற்பட்ட இரண்டொரு சொற்கள் அவனை அப்படியே நிலைகுத்தி நிற்கச் செய்துவிட்டன. அவன் நின்றான்.

"தேர்தல் நெருங்கிக்கிட்டு இருக்குது. எங்கள் மாவட்டக் கமிட்டியை நேத்திக்குத்தான் கூட்டிப் பேசினோம். அதிலே உங்களையே இந்தத் தொகுதியிலே நிறுத்திப்போடறது என்று எல்லாரும் ஒருமனமா முடிவு செய்திருக்கிறோம்!"

"என்னையா நிறுத்தப்போறீங்க? நான்போய் என்னசெய்யப் போறேனுங்க? ஒழுங்கா பத்திரிகைகூட நான் படிக்கிறது இல்லே! உலக விவகாரம் ஒருபக்கம் இருக்கட்டும்—ஊர்விவகாரமே எனக்கு நல்லா தெரியாது."

"அப்படியானா ஒண்ணு செய்யுங்களேன்! உங்க பிள்ளையை நிறுத்திப் போடுங்க. காங்கிரஸ் அபேட்சரா அவர் நின்னா ஜாம்ஜாம் என்று வெற்றிபெற்றுத் தீர்த்துடலாம்!"

"காங்கிரஸ் என்றாலே அவனுக்குப் பிடிக்காதுங்களே! என் எதிரிலேயே அவன் எத்தனையோ தடவை காங்கிரசைப்பத்திக் குறைவாப் பேசியிருக்கிறான். காங்கிரஸ் ஆட்சி பர்மிட் ஆட்சி! லைசென்ஸ் ஆட்சி! அதில் நிறைந்திருப்பது தன்னலக் கும்பல்! அது வடவராட்சி! இங்கே உள்ள காங்கிரஸ்காரங்க எல்லாம் வடக்குக்கு ஏஜண்டுகள்! இவங்க நம்மையெல்லாம் வடக்குக்கு அடிமையாக்கிவிட்டாங்க — இப்படி இன்னும் என்னவெல்லாமோ சொல்லிப் பேசறானே!"

அதையெல்லாம் பெரிசா எடுத்துக்கக்கூடாதுங்க. அவங்க என்னமோ இளமைத் துடிப்பிலே அப்படிப் பேசறாங்க. அவங்க சொல்றது

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

1-4-'62.

தம்பி !

வானவெளியிலே! 'வாயுவேக மனோவேகத்திலே' பயணம் செய்யும் ஏற்பாடு உருவாகிக்கொண்டு வருகிறது என்பதுபற்றி மெத்த ஆர்வத்தோடு, விளக்கமாக, விவரம் அறிந்த ஒருவர் எடுத்துக் கூறுகிறார் என்று வைத்துக்கொள்—இதனைக் கேட்டு, இதனால் விளையக்கூடிய நன்மைகள் யாவை என்பனபற்றி விவரம் கேட்டறியவும், இது எப்படி நடைபெற முடிகிறது என்று விளக்கம் கேட்டுத் தெளிவுபெறவும் சிலருக்குத் தோன்றும்; சிலர் வியப்பிலே மூழ்கி விவரம், விளக்கம் கேட்காமலேயே இருந்துவிடுவர்; சிலர் இதனைப் புரிந்துகொள்ளாமலேயே, என்னமோ சொன்னார்கள் கேட்டோம், எத்தனையோபேர் எதை எதையோ சொன்னார்கள் கேட்டோம், அதுபோல இது ஒன்று என்று இருந்துவிடுவர்; மேற்கொண்டு விவரம் விளக்கம் கேட்டறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் கூடத் தோன்றாது; வேறு சிலர், வியப்புக்குரியது இதுமட்டும் அல்ல; இதனைவிட வியப்புமிக்கது உண்டு என்று கூறித் தமக்குத் தெரிந்த தகவல்களைக் கூறுவர்; இன்னும் சிலர் இது வியப்புக்குரியதே அல்ல, மிக அற்பமானது என்று கூறிவிடுவர்.

எது கூறினும், எது நேரிடினும், பலர் பலவிதமான போக்கிலே, தமது கருத்தினைக் கூறுவர்; அவரவர்களின் நினைப்பு, நிலை, தரம், தன்மை ஆகியவைகளைப் பொறுத்து, போக்கு அமையும்.

ஒரு சிலர், அலாதியான போக்குடன் இருப்பர். எதனைக் குறித்தும் அக்கறையற்றும், எவரைக் குறித்தும் அலட்சியமாகவும் தமது போக்கு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டிக்கொள்வதிலே இச்சையும் துடிப்பும் அவர்களுக்கு மிகுதியாக இருக்கும்.

வானவெளிப் பயணம்பற்றிப் பலர் பல்வேறுவிதமான கருத்துக் கூறுவர், இவர்களோ, அலட்சியப் போக்குடன்,

“வானவெளியில் சுற்றிவிட்டுவரத்தானே ஏற்பாடு செய்கிறார்கள்; அங்கேயே இருந்துவிடுவதற்கு அல்லவே!”

என்று கேட்டு, வானவெளி சுற்றிவர ஏற்பாடு செய்தது மிகப்பெரிய அதிசயம் அல்ல என்று விவரம் தெரியாதவர்கள் எண்ணிச் சிரித்திடச் செய்வார்கள்.

அறுவடையும்—அணிவகுப்பும்

[4]

வானவெளிப் பயணம்பற்றித் தகவல்களைத் திரட்டி வந்து ஆர்வத்தோடு கூறிக்கொண்டிருந்தவருக்கு, எரிச்சல் ஏற்படும். அதைக்கண்டு, அலட்சியப் போக்கிலே பேசியவர், மகிழ்ச்சிகொள்வார்.

இப்படிப்பட்டவர்களை, தம்பி! பார்த்திருக்கலாம்; எங்கும் இருக்கிறார்கள்; எதற்கும் இந்தப் போக்கிலே பேசுவார்கள்.

சந்திரமண்டலம் செல்கிறார்கள் என்று கூறிப் பாரேன், சூரியமண்டலம் போகவில்லையே! என்று கேட்டுக் கூறியவரின் ஆர்வத்தைக் கேலிக்குரியதாக்கு வார்கள்.

வியப்புக்குரியவைகள்பற்றியே இவர்கள் போக்கு இவ்விதம் இருக்குமென்றால், சாதாரண நிகழ்ச்சிகள் குறித்து இவர்கள்கொள்ளும் நினைப்புப்பற்றியும் வெளி யிடும் கருத்துப்பற்றியும் அதிகம் விளக்கவேண்டுமா!

எதைக்கண்டும், கொண்டும் எவரும் மகிழ்ச்சி அடையவோ பெருமைப்படவோவிடமாட்டார்கள். பிறர் மகிழ்ச்சியும் பெருமையும் அடைய முடியாமல் போவ திலேதான் இவர்களுக்கு மகிழ்ச்சி, பெருமை!

நல்ல பாலிலே விழுகிறதே ஈ, இரண்டு சொட்டுக ளாவது குடித்து மகிழ்கிறதா? இல்லை! செத்து மிதக் கிறது!! பால் கெட்டுச் சாக்கடையில் ஊற்றப்படுகிறது. இதனால் ஈக்கு என்ன இலாபம்? பால் சாப்பிட எண் ணியவன் சாப்பிடவில்லை அல்லவா? அதுதான்!

இந்த மனப்போக்கிலுள்ளவர்கள், தமக்கென்று ஒருவிதமான பலனும் கிடைக்காவிட்டாலும், மற்றவர் கள் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறபோது, பாலில் விழும் ஈபோலாகி, அந்த மகிழ்ச்சியை மாய்க்கவும் பெரு மையைக் குலைக்கவும் முற்படுவர்.

திருமணம், புதுமனைபுகுவிழாப் போன்ற நிகழ்ச்சிகளிலே மகிழ்சசி பெறுவோர் பலர் இருப்பர்; அந்த இடங்களிலே, இப்படிப்பட்டவர்கள் சிலர் இருந்து கொண்டு, மற்றவர்களுக்கு எரிச்சலூட்டித் தமக்கு மகிழ்ச்சி தேடிக்கொள்வர்.

குட்டநோய் கொண்ட ஒருவர், அவர்பால் அனு தாபம் காட்டுபவரிடமே இதுபோல நடந்துகொண்டது எனக்குத் தெரியும்.

உங்களைப்போன்ற நல்லவர்களுக்கா இதுபோன்ற கொடிய நோய் வருவது. என்னமோ போங்கள், பார்க்கும்போதே வயிறு பகீர் என்கிறது. துவக்கத்தி லேயே கவனித்திருக்க வேண்டும்; தக்க மருந்து எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்; அப்போது கவனிக் காமல் விட்டுவிட்டீர்கள்; இப்போது இந்த அளவுக்கு வளர்ந்துவிட்டது — என்றெல்லாம் நண்பர், பரிவுடன் பேசி, நோய்கொண்டவருக்கு ஆறுதலளிக்க முற்பட்டார்.

உடல் மட்டுமல்ல, உள்ளமே நோய்கொண்டவ ராகிப்போயிருந்த அந்த ஆசாமி, இவ்வளவு பரிவுடன் ஆறுதலளித்தவருக்கு நன்றி கூறவில்லை. மாறாக, ஆறுதல் கூறியவரை உற்றுப் பார்த்துக்கொண்டு,

"என் விஷயம் இருக்கட்டும். உனக்கு, நெற்றியிலே என்னமோபோல இருக்கிற தப்பா. சும்மா, 'தேமல், படை' என்று இருந்துவிடாதே."

என்று பேசி, ஆறுதல் பேசியவர் அச்சப்படும்படி செய்துவிட்டார்.

இந்தப் போக்குடையோர், ஒருவன் புதுவீடு கட்டி, அதிலே குடிபோவதுபற்றி, என்னென்ன பேசுவார்கள் என்பதை எண்ணிப்பார், தம்பி! வேடிக்கை வேடிக்கை யாக இருக்கும்; இப்படிப்பட்டவர்களின் மனப்போக்கு எத்தகையது என்பது விளங்கும்.

✿

வீடு கட்டிவிட்டானும் வீடு. ஊரிலே உலகிலே யாருமே கட்டாதவிதமான வீடு! பெரிய அரண்மனை கட்டிவிட்டதாக நினைப்பு!!

தஞ்சாவூர் அரண்மனையே கலனாகிப் போய்விட்ட தாம். இவன கட்டிவிட்ட வீடு காலமெல்லாம் நிலைத்தா இருக்கப்போகிறது?

அட, என்ன இதைப்போய் இவ்வளவு பிரமாதப் படுத்திப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள், வேறு வேலையில் லாமல். என்னமோ, ஒரு வீடு கட்டிவிட்டான், வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பணம் சேர்த்து......

அவ்வளவுதான் உனக்குத் தெரியுமா! அட, பைத் யக்காரா! சேட்டிடம் வாங்கியிருப்பது, ஐந்து ஆயிரம்! தெரியுமா! பாங்கிலேகூடப் பத்தோ, எட்டோ......

கடன் வாங்கித்தானா இந்தப் பகட்டு......

வீட்டிலே ஒரு நகை கிடையாது. எல்லாம் விற்றுத் தீர்த்துவிட்டான்......

கிடக்கட்டும், கையிலே உள்ள பணம், நகைவிற்ற பணம், இதனைக்கொண்டு வீடுகட்டிவிட்டால் பரவா யில்லை, கடன்வேறு பட்டிருக்கிறானே...அதை எப்படித் தீர்க்கப் போகிறான்?

அதுகிடக்கட்டும்......கடன்பட்டு ஏன் இவ்வளவு பெரிய வீடுகட்ட வேண்டும்......ஊர் மெச்சிக்கொள் ளவா?

பெரிய புள்ளி என்று எண்ணிக்கொள்வார்கள்— கடன் கொடுத்தவனும் திருப்பித்தரச் சொல்லித் தொல்லை தரமாட்டான்—புதிதாகக் கடன் கேட்டாலும் வீட்டைப் பார்த்து மலைத்துப்போய், தட்டாமல் தயங்கா மல் கொடுப்பான் என்ற நப்பாசை காரணமாகத்தான், இவ்வளவு பெரிய வீடு கட்டிக்கொண்டான்......

எல்லோருமே பெரிய வீடு, பெரிய வீடு என்று பேசிக்கொண்டு இருக்கிறீர்களே, என்ன பெரிய வீடு இது......?

அட, அவன் நிலைக்கு அது பெரிய வீடுதானே......

முன்பு அவன் புறாக்கூண்டு போன்ற வீட்டில்தானே இருந்துவந்தான்......இது பெரிது அல்லவா...!

பார்வைக்குத்தான் பெரிது......அதிலே போட்டுக் கட்டப்பட்டிருக்கும் சாமான்கள் மட்டம், தெரியுமா?

தேக்கு மரமா, கதவு, பலகணி எல்லாம்? மாம்பலகை... கள்ளி இப்படிப்பட்டவை......

ஆமாமாம்! சுவரிலே வெடிப்பு இருக்கிறது......

சுண்ணாம்பு அரைத்த இலட்சணம் அப்படி...... வேகாத செங்கல்லை வைத்துச் சுவரை எழுப்பிவிட்டால், வெடிப்பு இருக்காதா......

ஆனால், ஊரார் பார்க்கிறபோது, கண்ணுக்குப் பெரிய வீடு தெரிகிறதல்லவா......உடனே ஆசாமி வளமாக இருக்கிறான் என்று எண்ணிக்கொள்கிறார்கள்......

உள்ளே புகுந்து பார்ப்பவர்களுக்குத்தானே உண்மை தெரியும்......

கொஞ்ச நாள் போகட்டுமே......தானாக எல்லா விஷயமும் வெளியே வந்துவிடும், பாரேன். கடன் கொடுத்தவர்கள் வரிசையாக வந்து நிற்பார்கள்....வீடு, மூலைக்கு மூலை ஒழுகும், வெடிக்கும்......கலனாகிப் போகும்......

பழுது பார்க்கக்கூடப் பணம் கிடைக்காமல் பயல் திண்டாடப் போகிறான்......

இப்போது புதுவீடு கட்டிவிட்டோம்......பெரியவீடு கட்டிவிட்டோம் என்று பூரித்துக் கொண்டிருக்கிறான்.....

ஊராரும் அவன் கட்டியுள்ள வீட்டைப்பார்த்து, அவனைப் பெரிய புள்ளி என்று எண்ணிக்கொள்கிறார்கள்......மரியாதை காட்டுகிறார்கள்......

ஆனால் ஒரு விஷயம் நாமே ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்; கடன்பட்டானோ, கைப்பொருளைச் செலவிட்டானோ, தரமான சாமானோ மட்டமானவையோ, எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், இவன் இப்படி ஒரு வீடு கட்டுவான் என்றுமட்டும் யாரும் எதிர்பார்த்ததில்லை. நாமே நினைத்ததில்லை.

அது உண்மைதான். வீடு கட்டப்போகிறான் என்று செய்தி வந்தபோதுகூட நம்பவில்லை......

நம்பவில்லையா...அட, கேலியே செய்தோம். இவனாவது பெரிய வீடு கட்டுவதாவது என்று......

இருக்கிறவீடே பறிபோகப் போகிறது என்றுகூடத் தான் சொன்னோம்......நம்மை எல்லாம் ஏமாற்றிவிட்டான்......நம்முடைய பேச்சையெல்லாம் பொய்யாக்கி விட்டான்......

அது உண்மைதான்......அதை எண்ணிக்கொண்டால், நமக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது.

கேட்பானல்லவா, என்ன ஐயா! என்னை அவ்வளவு கேலி பேசினீர்களே......எதுவும் என்னால் ஆகாது என்று ஏசினீர்களே......இப்போது பார்க்கிறீர்களே பெரிய வீடு......என்ன சொல்கிறீர்கள் என்று கேட்பானல்லவா......

இவனை நம்பி எவன் பணம் கொடுப்பான் என்றுகூடத்தான் நான் பேசியிருக்கிறேன்......

பணத்தைக் கொடுத்து ஏமாந்து போகாதீர்கள் என்று நான் எச்சரிக்கையே செய்தேன்...

பணத்தைக் கொடுக்காதபடி நான் சில இடங்களைத் தடுத்தும் இருக்கிறேன்...

அப்படி எல்லாம் இருந்தும் பணமும் கிடைத்தது, வீட்டையும் பெரிதாகக் கட்டிக்கொண்டான் என்பதை எண்ணும்போதுதான், வெட்கமும் கோபமும் பீறிட்டுக் கொண்டு வருகிறது.

எனக்கும் அப்படித்தான். ஆனால், நாமும்,அவனைப் பார்த்து, பெரிய வீடு கட்டிவிட்டாய், பரவாயில்லை என்று சொன்னால், பயலுக்குச் சந்தோஷம் அல்லவா ஏற்படும்.

ஆமாமாம்! துள்ளுவான்!

போடா, மகாபெரியவீடு கட்டிவிட்டாய் வீடு,என்று தான் நாம் சொல்லவேண்டும்.

ஏன், இன்னும்கூடச் சொல்லலாமே. அடே அப்பா! வீடு கட்டிவிட்டால் மட்டும் போதாது; பட்ட கடனைத் தீர்க்க வேண்டும் என்று சொல்லலாம்...

ஆமாய்யா...அதுதான் சரி...அதுவும், பத்துப்பேர் எதிரில் சொல்லவேண்டும்.

வீடு நன்றாக அமைந்திருக்கிறது என்று சில பைத்யங்கள் பேசும்; இவன் பல் இளித்தபடி நிற்பான்;அந்தச் சமயமாகப் பார்த்து இதைச் சொல்லவேண்டும்....

பயல் திருதிருவென்று விழிப்பான். பாராட்டவந்தவர்களும் செச்சே! இவ்வளவுதானா விஷயம், கடன் பட்டுத்தான் கட்டினானா இந்த வீட்டை என்று பேசிக் கொள்வார்கள்.

பழைய கடனுக்குப் புதியவீடு ஏலம் போடப்பட்டது என்று பத்திரிகைத்தலைப்புப் பார்த்தேன், நீபார்த்தாயோ, என்று, நான் கேட்கப்போகிறேன், அந்தப் பயல், சந்தனம் கொடுத்து, வெற்றிலைப் பாக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று எனக்கு உபசாரம் செய்வானல்லவா, அப்போது!!

*

சரி! அண்ணா! புதுமனை புகுவிழா பற்றியும், பிறர் மகிழ்ச்சி கண்டு பொறுதார் போக்குப் பற்றியும், இப்போது எதற்காக இவ்வளவு கூறுகிறாய்; அறுவடையும் அணிவகுப்பும் கண்டு, அதன் பொருள்பற்றி விளக்கம் அறியும் வேளையில், என்று கேட்கிறாய்; தம்பி! காரணமாகத்தான் இதனைக் கூறுகிறேன்; பிறர் வாழக் கண்டு மனம் பொறாத போக்கினரின் பேச்சுப் போலவே, நமது கழகம் பெற்றுள்ள வெற்றி கண்டு காங்கிரஸ் வட்டாரத்தினர் மனம் வெதும்பி, நாம் நமது வெற்றியால் ஏற்படும் மகிழ்ச்சியைச் சுவைக்க முடியாதபடி செய்துவிட என்ன செய்யலாம், என்ன சொல்லலாம் என்று துடியாய்த் துடித்துக் கிடக்கிறார்களே, அந்தப் போக்கு எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காகத்தான், இதனைச் சிறிதளவு விவரமாக்கினேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், 34 இலட்சம் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஒடுக்கிவிட்டோம், பிளந்துவிட்டோம். செயலற்றதாக்கிவிட்டோம், எனவே தேர்தலிலே, ஈடுபடக்கூட அதற்குப் போதுமான வலிவு கிடையாது. தேர்தல் வேலையின் பாரமே கழகத்தை மேலும் முறித்துவிடும், தகர்த்துவிடும், என்று அவர்கள் நம்பிக் கிடந்தனர்.

அதனாலேதான், கழகம் வெற்றிபெற்றது கண்டு, அதிர்ச்சி அடைந்துள்ளனர். அதிர்ச்சி காரணமாக அலறுகிருர்கள்; அலறுவதுடன், நான் துவக்கத்திலே காட்டியுள்ளபடி,நாம் பெறக்கூடிய மகிழ்ச்சியையாவது, எரிச்சலூட்டும் பேச்சுப் பேசி மாய்க்கலாம் என்று முனைகிருர்கள்.

பணபலம், பத்திரிகை பலம், பதவிபலம், ஆதிக்கக்காரர் பலம், ஆகியவைகளை நிரம்பப்பெற்று, அவைகளைத் தக்கவிதத்தில் தருணமறிந்து பயன்படுத்தினல் மட்டுமே தேர்தலில் வெற்றிபெற முடியும், அத்தகைய 'பலம்' கழகத்திடம் ஏது. எங்கிருந்து கிடைக்கும்; ஆகவே தேர்தலிலே வெற்றி கிட்டப்போவதில்லை என்று காங்கிரசின் பெருந் தலைவர்கள் நம்பினர்கள்; மற்றவர்களை நம்பும்படி செய்தார்கள்.

இந்தத் தேர்தலிலே தி. மு. க. எப்படி......? என்று 'அகில இந்திய' காங்கிரசுத் தலைவர்கள் கேட்ட போதெல்லாம், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், குறும்புப் புன்னகையுடன்;

> "தி. மு. கழகமா? அது தேர்தல் வரையிலே இருந்தால்தானே.....அதற்குள்ளாகவே தி. மு. க. தீர்ந்துவிடுமே! அங்கு இப்போது ஒரே குழப்பம், குளறுபடி, குத்து, வெட்டு,..."

என்று மகிழச்சி பொங்கப் பொங்கக் கூறிவந்தனர்.

> கட்சிக்கு உள்ளே பூசல்கள் எழுவது எங்கும் உண்டல்லவா?

என்று கேட்டவர்களுக்குக்கூட இவர்கள்,

> இந்தக் கழகத்திலே ஏற்பட்டுவிட்ட குழப்பம் சாதாரணமானதல்ல. கழகத்தின் தூண்களே சாய்கின்றன! தூண்கள் சாய்ந்த பிறகு, கட்டிடம் நிலைக்குமா.

என்று கூறிக் கைகொட்டிச் சிரித்தனர்.

> குழப்பம் செய்கிறவர்கள் உள்ளபடி, கழகத்திலே மிக வலிவு உள்ளவர்களா?

என்று கேட்ட கேள்விக்கு இவர்கள்,

> ஆமாம்! உள்ளபடி கழகத்துக்கு ஓரளவு வலிவு, செல்வாக்கு, வளர்ச்சி இருப்பதே இவர்களாலேதான். இவர்கள் இல்லை என்றல் கழகமே கலகலத்துப் போகும். இவர்கள் இப்போது, கழகப்போக்குச் சரியில்லை, கொள்கை நியாயமில்லை, திட்டம் தவருனது தீதானது, என்று வெளிப்படையாகப் பேசவும், கழகப்போக்கை எதிர்க்கவும் முற்பட்டு விட்டார்கள்.

என்று இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் விளக்கம் அளித்தனர். அதுகேட்டு, 'அகில இந்திய' காங்கிரசுத் தலைவர்கள் அகமகிழ்ந்ததுடன் இருந்துவிட்டனர்; எண்ணிப் பார்க்கவில்லை; ஆய்ந்து பார்க்கவில்லை. ஆய்ந்து பார்த்திருப்பார்களானல்,

> ஒரு இடத்திலே மிக முக்கியமானவர்கள், தூண்கள், வலிவும் வளர்ச்சியும் தருகிறவர்கள், இருப்பார்களானல், அவர்கள், அந்த இடம் கெட்டுவிட்டது என்று கூறுவதிலே பொருள் இல்லை; கெட்டுவிட்டது என்று கூறி அவர்கள் அந்த இடத்தைவிட்டு வெளியேறத் தேவையில்லை; யாரார் இடத்தைக் கெடுத்து விடுகிறார்களோ அவர்களை இந்தத் தூண் போன்றவர்கள் விரட்டியிருக்கவேண்டும்; அது முடியவில்லை என்பதிலிருந்து, இவர்கள் தூண்களும் அல்ல; தூய்மையாளரும் அல்ல; வல்லமைமிக்கோரும் அல்ல; வளர்ச்சிக்குப் பொறுப்பாளிகளும் அல்ல, என்பதனைப் புரிந்துகொண்டிருக்கமுடியும்.

ஆனல், அகில இந்திய நிலையினருக்குத் தமது 'தளபதிகளிடம்' அவ்வளவு நம்பிக்கை! முதுகைத் தட்டிக் கொடுத்தனர்.

முதல் மந்திரிகள், மந்திரிகள் என்ற நிலையினர் கூறும்போது, எப்படி நம்பிக்கை ஏற்படாமலிருக்கும்.

அவர்களின் பேச்சுக்குப் பொருளும் வலிவும் ஏற்றி வைக்கும் விதமாக, 'ஏடுகள்' கழகத்திலே தலைதூக்கிய 'எதிர்ப்பாளர்களை'த் தமது 'செல்லப்பிள்ளைகள்' ஆக்கிக் கொண்டு, அவர்களின் பேச்சிலே பேரறிவையும் போக்கிலே பெருந்தன்மையையும், கனைப்பிலே இடிமுழக்கத்தையும், கண்வீச்சிலே மின்னலையும், கண்டனர்!! பத்தி பத்தியாக 'புகழ்' கொட்டினர்; அவசர அவசரமாக ஆரூடம் கணித்தனர். இதனை நம்பி, அகில இந்தியத் தலைவர்கள் மெத்தவும் ஏமாந்துபோயினர்.

தம்பி! நமது கழகத்துக்குள்ளே ஏற்பட்ட கலாம், காங்கிரசுப் பெரும் தலைவர்களுக்கு, இனிக் கழகம் தலைதூக்காது, என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதிலே ஆச்சரியமில்லை, ஏனெனில் நம்மிலேயே பலருக்கு அந்தப் பீதி இருந்தது.

என்னைப் பொறுத்தமட்டில் எதிர்ப்பாளர்களாகி, நம்மைவிட்டுச் சென்றுவிட்டார்களே, அவர்களின் அளவிடற்கரிய ஆற்றலால், நாம் அழிக்கப்பட்டுப் போய்விடுவோம், அவர்கள் தமது கோபப் பார்வையாலேயே நம்மைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடுவார்கள் என்ற கவலை எழுந்ததே இல்லை; எனக்கிருந்தது எல்லாம், மன உளைச்சல், பாசப் பிணைப்பினலே ஏற்பட்ட உணர்ச்சிகள் என் கண்களைக் குளமாக்கின, கருத்தைக் குழப்பின, செயலற்றவனுகிவிட்டேன்.

நல்ல வேளையாக, எனக்கிருந்த அந்த மன உளைச்சலைப் போக்கும் விதமாக, விலகியவர்கள் தாங்கள் எவ்வளவு பெருந் தலைவர்கள் என்பதை மட்டுமல்ல, நான் எவ்வளவு அற்பன், இலாயக்கற்றவன் என்பது பற்றிய தமது எண்ணங்களைப் பேச்சாலும் எழுத்தாலும் எடுத்

துச் சொல்லி, ஏசி ஏசி என் மனதிலே அலைமோதிக் கொண்டிருந்த பாச உணர்ச்சி அவ்வளவையும் உலர்ந்துபோகச் செய்தனர். அதனால், நான், வறண்ட கண்ணினனானேன், குழப்பம் நீங்கப்பட்ட மனதினனானேன், செயலற்ற நிலை நீங்கி, கடமையைச் செய்வோனானேன்!

அவர்கள் இந்த அளவுக்கு வேகமாகவும் கடுமையாகவும், கேவலமாகவும், முன்தொடர்பு பற்றிய நினைப்புக்கே இடமில்லாத முறையில் இழிவாகவும், பேசியும் எழுதியும் இராவிட்டால், நான் நெடுங்காலம், பாச உணர்ச்சி காரணமாகக், குழம்பிய மனதினனாகத்தான் இருந்திருப்பேன்; செயலாற்றும் நினைப்பு நசித்துக்கூடப் போயிருக்கும்; மாறிவிட்டவர்களின் கருத்துகள் நியாயமானவைகள்தானோ என்ற ஐயப்பாடுகூட உள்ளத்திலே புகுந்து குடைந்திருக்கும்.

ஆனால், இவை எதற்கும் இடம் இல்லாத முறையில், எடுத்த எடுப்பிலேயே, என்னைக் காண்பதே களிப்பு என்று ஒருமணி நேரத்துக்கு முன்புவரை பேசியதை மறந்து, என் உருவிலிருந்து உரைவரையில், கொள்கையிலிருந்து கூட்டுத் தோழர்கள்வரை, இழிவாகப் பேசி,

> ஓ! இவர்கள் ஏதோ புதிய கொள்கை கூறவில்லை; மூண்டுகிடக்கும் பகையைக் கக்குகிறார்கள்; தூண்டிவிட்டபடி தாக்குகிறார்கள்

என்பதை நான் உணரச்செய்தனர்; அதனாலேயே நான் இவ்வளவு விரைவிலே குழப்ப நிலையிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள முடிந்தது,

காங்கிரசுப் பெருந்தலைவர்களோ தங்களுக்குத் தரப்பட்ட கணக்குகளைச் சரியானவை என்று நம்பி, இனி, தி. மு. கழகம் நிலைக்காது; அதனை நிலைகுலையச் செய்ய, அதனிடம் நீண்டகாலமாக இருந்து வந்த நெடியவர்கள் கடும் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்; அதன் காரணமாகக் கழகம் கலகலத்துவிடப்போகிறது என்று நம்பிக்கொண்டனர்.

இங்குள்ளவர்களும், மெத்த நம்பிக்கையுடன்,

> கழகத்தின் கர்த்தா பெரியார்; அவரே தி. மு. கழகத்தை அழிக்கத் துடிக்கிறார். கழகத்தின் கருவூலம் வெளியேறிவிட்டது; எனவே கழகத்துகுக எதிர்காலம் இல்லை

என்று திட்டவட்டமாகப் பேசி வந்தனர்.

கழகம்; இயக்கம், கட்சி என்றால், அதிலே, யாரார், கடுமையான பேச்சுகளில் வல்லவர்கள் என்று தம்மைக் காட்டிக்கொள்கிறார்களோ, அவர்களாலேயே, அது இயங்கி வருகிறது, என்று ஆராய்ச்சியில்லாதவர்கள் எண்ணிக்கொள்வது இயல்பு.

நம்மைவிட்டுப் பிரிந்தவர்கள் இங்கு இருந்தபோது, இலட்சியம் அவர்களுக்கு இனிப்பு அளித்ததால், அந்த இலட்சியத்தை எதிர்த்தவர்களை என்னென்ன விதமான கடுமொழியால் தாக்கினர் என்பதை நாடு அறியும், நமது இலட்சியத்தின் பகைவர்கள் நன்கு அறிவார்கள் அல்லவா? இடிமுழக்கமிடுவோர், மாறிவிட்டது கண்டதும், முனனாலே வாங்கிய அடிகளால் ஏற்பட்ட தழும்புகளைத் தடவிப் பார்த்துப் பார்த்து, இப்படி நம்மைத் தாக்கியவர்கள் இப்போது நம்மைத் தாக்கப்போவதில்லை; நம்மைத் தாக்கப்போவதில்லை என்பது மட்டுமல்ல, இருந்துவிட்டுவந்த இடத்தைத் தாக்கப்போகிறார்கள், கண்குளிரக் காணலாம் என்று எண்ணி, விலகியவர்களை வரவேற்று, ஆலம்சுற்றிப், பொட்டிட்டுச், சேரிடமறிந்து சேர்ந்தோய் வாழி என்று வாழ்த்தி, திருஷ்டி கழித்து வரவேற்றுத் திருவிழா நடத்தினர்.

> தம்பி! அவர்கள் அடைந்த மகிழ்ச்சியின் தன்மையையும் அளவையும் வேகத்தையும் என்னாலே உணர முடிகிறது.
>
> எந்த இலட்சியத்தை உலகமே எதிர்ப்பினும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று இடிமுழக்கம் போன்ற நிலையில் எடுத்துக்கூறி வந்தார்களோ, அந்த இலட்சியத்தை, வாழ்த்தியவர்களே ஒருநாள், அது தீது, ஆகாது, என்று பேசி, அந்த இலட்சிய ஒழிப்புத்தான் இப்போது எமது இலட்சியம் என்று பேசிடக் கேட்டால், நெடுங்காலமாகவே, அந்த இலட்சியத்துக்கு வலிவு வளர வளரத் தமது ஆதிக்கத்துக்கு அழிவு என்பதனை உணர்ந்து, எதிர்த்து வந்தவர்களுக்கு, அளவிட முடியாத அகமகிழ்ச்சி பொங்காதா!

பொங்கியதுடன் இல்லை; புதிய நம்பிக்கையே பிறந்தது; அந்த நம்பிக்கையினால்தான், அவர்கள், கழகம் இந்தத் தேர்தலிலே ஈடுபட்டு அடியோடு அழிந்துபோகும் என்று பேசினர்; மேலிடத்தவருக்கும் அந்த நம்பிக்கையைத் திடமாக்கினர்.

தம்பி! இப்போது கூர்ந்துபார், தேர்தல் களத்தை.

ஒருபுறத்தில் கழகம் பிளந்துவிட்டது, கலகலத்துக் கிடக்கிறது; தாக்கும் சக்தியும் தாங்கும் சக்தியும் இல்லை; சலித்துப்போய், களைத்துப்போய், பீதியுடன் தள்ளாடிக் கொண்டு வருகிறது; இதனை ஒரு சுட்டுத்தட்டினால் கீழே வீழ்ந்துவிடும், பிறகு எழுந்திருக்கவே முடியாது, என்ற நம்பிக்கை வேகத்துடன், எல்லாவிதமான போர்க் கருவிகளையும் ஏராளமான அளவு குவித்துவைத்துக் கொண்டு, ஆடுநர் பாடுநர், எடுபிடிகள் உடன்வர, காங்கிரசுக் கட்சியின் அணிவகுப்பு!

மற்றோர்புறம், களத்தின் தன்மையைக் கண்டறிய வேண்டிய நேரத்தில், கலாம் விளைவிப்போரை அடக்கித் தீரவேண்டிய வேலையில் ஈடுபட்டிருந்துவிட்டதால், ஆர அமர ஏற்பாடுகளைச் செய்ய முடியாமல், போதுமான படைக்கலன் இல்லாமல், கூடஇருந்தோர் குடிகெடுத்தனரே, குலவி மகிழ்ந்தோர் குத்திக்குடையத் துணிந்தனரே, கோட்டைக் காவலர்களாக இருக்க வேண்டியவர்கள் காட்டிக் கொடுப்போர்களாகிவிட்டனரே, ஏற்றி ஏற்றித் தொழுதவர்கள் ஏசித் தூற்றித்திரிகின்றனரே, என்ன செய்வது எப்படித் தாங்கிக்கொள்வது என்ற கலக்கமும் கவலையும் குடையும் நிலையில், மாற்றாரின் படைவரிசையிலே பளபளப்பான படைக்கலன்கள் இருக்கக் கண்டு, போதுமான படைக்

கலன்களைத் தேடிக்கொள்ளக்கூட நேரம் கிடைக்க வில்லையே என்று ஏக்கம் கொண்ட நிலையிலே நமது கழக அணிவகுப்பு!

பாய்ந்தோடிப் பதுங்கிக்கொள்ள, அடர்ந்த ஒரு புதர் ஒரு பக்கத்தில்; இரத்தவாடையுடன் கூடிய வாயைத் திறந்தபடி உறுமிக்கொண்டு தாக்கவரும் வேங்கை ஒரு புறம்; எதிர்ப்புறத்தில் வழுக்குப் பாறை மீது காலை மிகக் கஷ்டப்பட்டு ஊன்றிக்கொண்டு, காம்பு ஒடிந்த வேல் கரத்தினில் ஏந்திக்கொண்டு தாக்கத் தயாராக நிற்கும் துணிவு மிக்க இளைஞன்!

தம்பி! தேர்தல் களத்திலே நாம் பெற்றுள்ள வெற்றி மிகப் பெரிது என்பதால் அல்ல, மிகுந்த இடர்ப் பாடுகளுக்கிடையிலே பெற்ற வெற்றி என்பதனாலேயே, அந்த வெற்றியின் அருமையும் பெருமையும் தரத்தில் மேலானது என்று, கெடுமதியற்றோர் அனைவருமே பாராட்டுகின்றனர்.

எரிச்சலூட்டி இன்பம் காணும் போக்கினர் தவிர, மற்றவர்கள், இரு அணிவகுப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, நாம் பெற்ற வெற்றி தரமிக்கது என்று தீர்ப் பளிக்கின்றனர்.

வெற்றியாம் வெற்றி, என்ன பெரிய வெற்றி இது என்று வேகமாகப் பேசத் துவங்கியவர்கள்கூட, தமிழ் நாடு காங்கிரஸ் குழுவாக அமர்ந்தபோது,

> பொதுத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள வெற்றி, கவனித்துத் தீர வேண்டிய பிரச்சினையாகிவிட்டது,

என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாம் பெற்றுள்ள இடங்களின் எண்ணிக்கை ஒரு ஆளுங்கட்சியை மிரட்டக்கூடியது அல்ல, என்பதைத் தம்பி! நினைவிலே கொள்ளவேண்டும். இப்போதும் 139 அவர்கள்; நாம் 50. ஆமாம்! சட்டசபையிலே நமது கோரிக்கைகளைக் காலில் போட்டு மிதித்துத் துவைத்துவிடத்தக்க வலிவு இருக்கத்தான் செய்கிறது. ஆனால், மிதிக்க எண்ணம் பிறக்கும்போது, முன்பு 15 பேர்களாக இருக்கும்போது, காலின்கீழ் போட்டு மிதித்துத் துவைத்தோம், அழிந்துவிடவில்லையே, மாறாக பதினைந்தாக இருந்தவர்கள் ஐம்பதாக அல்லவா வளர்ந்துவிட்டனர், இம்முறையும் சென்றமுறை போலவே எண்ணிக்கை பலம் ஊட்டிவிடும் செருக்கி னால், இந்த ஐம்பதின்மரை நசுக்கினால், அதன் விளை வாக, அடுத்த தேர்தலிலே நிலைமை என்ன ஆகுமோ... என்ற அச்சம் அவர்கள் மனதிலே எழத்தான் செய்யும்.

அடுத்த தேர்தலா? அடுத்த தேர்தலில், அடியோடு அழித்துவிடப்போகிறோம், தீனமூனாக்களை என்று சில் லறைகள் சினமிகுந்து பேசக்கூடும்; பெரியவர்களுக்கு அந்த நினைப்பு எழாது; அவர்கள் முன்புகொண்ட எண்ணமும் நடைபெற்ற நிகழ்ச்சியும் நினைவிலே நிச் சயம் இருக்கும்.

உள்ளபடி தம்பி! இந்தத் தேர்தலிலே நமது கழகம் அடியோடு அழிந்துபோகும் என்றுதான் காங்கிரஸ் தலைவர்கள் நம்பினார்கள், நாட்டுமக்களிடம் உறுதி யுடன் எடுத்துக் கூறினார்கள்.

ஆளுங்கட்சியின் அடிபணியச் செல்வவான்கள் திரண்டு நிற்பதையும், பத்திரிகைகள் பலம் தேடித்தரு வதையும் பெரியார் பக்கத்துணையாக இருப்பதையும், கழகத்தைவிட்டு விலகியோர் பகைகக்கி வருவதையும் பார்த்தபோது, இந்தத் தேர்தலிலே, திராவிட முன்னேற் றக் கழகத்தைத் தீர்த்துக்கட்டிவிட முடியும் என்ற நம் பிக்கை அமைச்சர்களுக்கு ஏற்படத்தானே செய்யும்.

பொதுமக்களிடம் பேசும்போதும் 'பத்திரிகை நிரு பர்களிடம் விளக்கம் அளிக்கும்போதும், அமைச்சர் கள், கழகம் ஒழிந்துவிடும், நாலுபேர் வருவார்களோ ஐந்துபேர் வருவார்களோ என்பதே சந்தேகம் என்று மிக்க உறுதியுடன், தெம்புடன் கூறிவந்தனர்.

பொதுத் தேர்தலிலே பிரசாரம்களைகட்டுவதற் காகப் பேசப்பட்டது இது என்றுகூடச் சொல்வதற்கு இல்லை. மதுரையில் நடைபெற்ற அகில இந்திய காங் கிரஸ் கமிட்டி கூட்டத்திலேயே, பண்டித நேருவும் வேறு சிலரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்யும் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளலாமா என்பதுபற்றிக் கேட்டபோது, இங்குள்ள காங்கிரஸ் அமைச்சர்கள், நேருபண்டிதருக்கு உறுதி அளித் தார்கள்

> "திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் கவனித்துக்கொள்கிறோம். பொதுத் தேர்தல் வரு கிறது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத் தைத் தலைஎடுக்க ஒட்டாமல் அழித்துவிடுகிறோம்."

காமராஜரும் சுப்ரமணியமும் வெளியிட்ட கருத்து; தந்த வாக்குறுதி; எடுத்துக்கொண்ட சூளுரை; விடுத்த அறைகூவல், இது.

இவர்களின் பேச்சை நம்பித்தான், பிப்ரவரி 22-ல் கூட டாக்டர் சுப்பராயன், சென்னையில் பேசுகையில், திட்டவட்டமாக,

> "இந்தத் தேர்தலில் தி. மு. க-வினருக்கு சட்டசபையில் இப்போதுள்ள இடம்கூடக் கிடைக் காது."

என்று தெரிவித்தார்.

நாற்பது ஆண்டுக்கால அனுபவம் அவருக்கு; வேகமாகப் பேசுவதை விரும்பும் இயல்பும் கொண்டவர் அல்ல. எனினும் அவருக்குத் தரப்பட்ட தகவல், அவரை இந்த அளவு உறுதியாகப் பேசச் செய்தது.

காங்கிரசை ஆதரிக்கும் ஏடுகளும், இதே கருத் தினை உறுதியாகத் தெரிவித்தன.

16—2—62ல், காங்கிரஸ் ஆதரவு ஏடு, தலையங்க மூலம்,

மறைவு

நமது நண்பரும் கழக முன்னணி வீரர்களில் ஒருவருமான மாயூரம் தோழர் காந்தி அவர் களின் புதல்வி மல்லிகா 21—3—62ல் திடீரென்று 14-வது வயதில் இயற்கை எய்திவிட்ட செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். —ஆசிரியர்.

கடந்த இரண்டு தேர்தல்களின்போது இருந்ததைக் காட்டிலும் இப்போது காங்கிரஸ் மீது மக்கள் அன்பும் அபிமானமும் அதிகரித் திருப்பதைக் காண்கிறோம். ஆகையால் இந்தத் தடவை மிகப் பெரும்பாலான வாக்காளர்கள் காங்கிரசுக்கே ஆதரவளிப்பார்கள் என்பதிலும் சந்தேகமில்லை-என்று கருத்தைப் பரப்பிற்று.

எதனையும் விளக்கமாக்கிப் பேசுபவர் அல்லவா, சுப்ரமணியனார்!! அவர் கூறியது இது.

இன்று தமிழ்நாட்டில் காங்கிரசுக்குச் சாதகமான சூழ்நிலை, அசைக்க முடியாத உறுதியான ஆதரவு பெருமளவுக்கு இருக்கிறது.''

பெருமளவு—அதிக இடம்—அதிக ஆதரவு என்று பொதுப்படையாகத்தான் பேசிவந்தார்கள் போலும் என்று எண்ணிக்கொள்கிறாயா, தம்பி! புள்ளிவிவரப் புலிகளல்லவா, திட்டவட்டம் இல்லாமலா பேசுவார்கள்! ஜனவரி திங்கள் நாட்டைச் சுற்றிப்பார்த்துவிட்டு வந்த சுப்ரமணியனார் தெளிவாகத் தெரிவித்தார்.

இப்போது சட்டசபையில் காங்கிரசுக்குள்ள ஸ்தானங்களைவிட 15 ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைப்பது உறுதி என்பது இப்போதைய சுற்றுப் பயணத்தில் அறிந்துகொண்டேன்.

என்று நிதிமதி இருதுறைகளையும் நிர்வகித்து வந்தவர் கூறினர்.

மக்களிடம் நேரிடையாகப் பழகும் முதலமைச்சர் காமராஜர் பத்திரிகை நிருபர்களிடம்,

தமிழ்நாடு சட்டசபையில் தற்பொழுது உள்ள ஸ்தானங்களைவிட அடுத்த தேர்தலில் முப்பது ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைக்கும்

என்று கூறியிருக்கிறார்.

தம்பி! அவர்களெல்லாம் போட்ட கணக்குப் பொய்த்துப் போகும்படி செய்துவிட்ட பெருமை, நமது கழக அணிவகுப்பினையே சேரும்.

எனவேதான், கவலைப்படுகிறோம் — கலக்கமடைகிறோம் — கவனித்தாகவேண்டும்—என்று காங்கிரசுப் பெருந்தலைவர்கள் இப்போது பேசவேண்டி வந்திருக்கிறது.

பிரச்சார முறைகளைச் செம்மைப்படுத்தினால், அடுத்தமுறை, கழகத்தை ஒழித்துவிடலாம் என்று சிலரும்,

பிரச்சாரம் செய்யவிடாமல் கழகத்தைத் தடுத்துவிட்டால் அடுத்தமுறை கழகத்தை ஒழித்துவிடலாம் என்று சிலரும் பேசுகிறார்கள்.

வழக்குகளைத் தொடுத்து வாட்டிடலாம் என்று ஒரு புறம் நினைப்பு நெளிகிறது, நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

வழக்கமான சிண்டு முடிந்துவிடும் வேலையில் ஈடுபடலாம் என்று சிலர் முனைகிறார்கள்.

இழித்தும் பழித்தும் பேசியும் எழுதியும், மக்கள் முன்னால், கழகத்தவர்களைக் கேவலப்படுத்திக் காட்டலாம் என்று எப்போதும்போல முயற்சி நடைபெற்றபடி இருக்கிறது.

காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் ஏடுகளும், கழகத்தை எதிர்த்துப் பேசினாலும் எழுதினாலும், பொது மக்கள், அவ்வளவு அதிகமானகவனம் செலுத்தமாட்டார்கள், கட்சிமாச்சரியத்தால் தாக்குகிறார்கள் என்று எண்ணிக்கொள்வார்கள், எனவே காங்கிரசுக்கு எதிர்க் கட்சிகள் என்ற பட்டயம் வைத்துக்கொண்டுள்ள கட்சியினரைக்கொண்டு, கழகத்தைக் கேவலப்படுத்தச் செய்வதுதான் அதிக பயன்தரும், என்று ஓர் சாகசச் சதித்திட்டமும் தீட்டப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது.

இவ்வளவும், தம்பி! நமது கழக அணிவகுப்பின் அருந்திறனின் பயனாக நாம் ஈட்டிய அறுவடையின் அருமையினைக் கண்டதாலே ஆட்சியினருக்கு ஏற்பட்டுவிட்ட அச்சம் காரணமாக!!

நம்மை அலட்சியப்படுத்திய காலம், மலையேறிவிட்டது!

நம்மை அழித்துவிட முடியும் என்று கொண்டிருந்த நம்பிக்கை நசித்துப்போய்விட்டது.

நமக்குள் உட்குழப்பம் மூட்டிவிட்டுக் கலகலக்கச் செய்யலாம் என்ற எண்ணம் தகர்ந்துவிட்டது, பெருமளவு; அடியோடு அல்ல!!

நம்மை உலகின் கண்களில் படாமல் செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகள் முறிந்துபோய்விட்டன.

நம்மை, மிகச்சிறிய கும்பல், கவனிக்கப்படத் தக்கதல்ல என்று நேரு பண்டிதரிடம் கூறிவைத்த பேச்சு, பொய்யுரை என்பதை நேரு பண்டிதரே உணர்ந்துகொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இவைகள் எல்லாவற்றினையும்விட, சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் வேகமான முறையில மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்று இடம்பெறும் திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பிலே இடம் கிடைக்குமா என்று ஆவலுடன் காத்துக்கொண்டும், கணக்குப்போட்டுக்கொண்டும் இருக்கும் வெறும் அரசியல் கட்சி அல்ல, மற்ற எந்த அரசியல் கட்சியும் நினைத்துப் பார்க்காத ஒரு விடுதலை குறிக்கோளுக்காகப் பணியாற்றும் இயக்கம்; திராவிடநாடு திராவிடருக்கே என்று கூறும் இயக்கம், என்பதனை உலகு அறிந்துகொண்டதுதான், அணிவகுப்பு ஈட்டியுள்ள பெருமிதமான அறுவடையின் அருமையான தன்மையாகும்.

தம்பி! நாம் யார்? என்று புரியும்படி, இந்த வெற்றி செய்திருக்கிறது.

நாம் எவரெவரால் எதிர்க்கப்பட்டு வந்திருக்கிறோம் என்பது விளக்கமாக்கப்பட்டுவிட்டது.

நாம் எத்தனை எத்தனை விபத்துகளைச் சமாளித்திருக்கிறோம் என்பதும் உலகு அறிந்துகொண்டு விட்டது.

இனி நாம், அறிவிக்கவேண்டியது, இந்த அணிவகுப்பு, ஆட்சியில் இடம் கேட்கும் வெறும் அரசியல் கட்சி அல்ல, அரசு அமைக்க விரும்பும் விடுதலை இயக்கம், திராவிடம் காணத்துடிக்கும் விடுதலை இயக்கம், எனும் பேருண்மையை.

இதனை நாம் எடுத்துக்கூற, சட்டசபையும் பாராளுமன்றமும் உள்ளன, போதும், என்று இருந்துவிடுவாயோ—தம்பி!

தம்பி! இதனை நாம் அந்த இடங்களிலே இருந்து எடுத்துச்சொல்லும் வாய்ப்பு இப்போது ஓரளவுதான் கிடைத்திருக்கிறது.

முழு அளவு கிடைத்துவிடுகிறது, நாமே பெரும்பான்மையான இடங்களையும் பெறுகிறநிலை வருகிறது என்று வைத்துக்கொள்.

தொடர்ந்து, ஆர்வத்துடன், முறையாக, நாம் பணியாற்றினால் அந்த முழு அளவு, அடுத்த தேர்தலில் நாம் பெற்றிடலாம்—ஐயம் வேண்டாம்.

மக்கள் தீர்ப்பு, நாட்டு விடுதலைக்குக் கிடைத்துவிட்டது என்று, திருவிடத்தைப் பிணைத்துவைத்துக் கொண்டுள்ள பேரரசு உணர்ந்து, மதித்து, விடுதலை அளித்திடின், நன்றி கூறுவோம், நல்லெண்ணத்தை எந்நாளும் மறவோம், நானில முழுவதிலும்: இவர்கள்போல் நமக்குற்ற நண்பர்கள் வேறு எவரும் இலர் என்று வாழ்த்துவோம்,

ஆனால், அஃதின்றி, இந்த வெற்றிகள் போதா, சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் இடம்பெற்று இலட்சிய முழக்கம் எழுப்பி னால் போதாது வாலிபனை வயோதிகனாக்கிடும் இருட்டறை போன்றுள்ள சிறையில் அடைபட்ட நிலையில், கண்காணாத் தீவினில் கரை தெரியாக் கடலைப் பார்த்தபடி கைதியாக இருந்திடும் நிலையில், தூக்குமேடையில் நின்றபடி, இந்த இலட்சியத்தை, திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தை எழுப்பவல்லாயோ என்று, பேரரசு நடாத்துவோர் கேட்டிடின், ஆம்! ஆம்! ஆருயிரைப் பலியிடவும் அஞ்சாது நிற்கிறோம்! தாயின் கரத்தில் பூட்டப்பட்டுள்ள தளைகள் பொடிபட, எமது உடல் ஆவியற்ற கூடாயினும், பரவாயில்லை. இன்னுயிரை எடுத்துக்கொள்ளுங்கள், இன்பத் திராவிடத்தைக் கொடுங்கள்! என்று கேட்டிடும், நெஞ்சினராதல் வேண்டும்.

இனியேலா, அண்ணா! என்று கேட்டு, என்னை வெட்கப்படச் செய்துவிடுகிறாய், தம்பி!

இன்னுயிரை எடுத்துக்கொள்! இன்பத் திராவிடம் கொடுத்திடு!—என்பதுதானே, நமது அணிவகுப்பின் பரணி, என்று கேட்கிறாய்.

ஆம்! தம்பி! ஆமாம்! மறந்தேனில்லை! நினைவுபடுத்தினேன்!!

அண்ணன்,

அண்ணாதுரை

விற்பனையாகிறது!

அண்ணா அவர்கள் தீட்டிய

எல்லோரும் இந்நாட்டு மன்னர்

விலை ரூ. 1—00

*

கம்பரசம்

(இரண்டாம் பாகம்) விலை 50 காசுகள்

விற்பனையாளர்களுக்கு 25 % கழிவு தரப்படும்.

சுகுமாரன் பதிப்பகம்,

80, சி. எஸ். செட்டித்தெரு, சின்னக் காஞ்சிபுரம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

சரியோ, தப்போ, — அதைப்பத்தி எல்லாம்கூட நீங்க இப்போ அக்கறை எடுத்துக்கத் தேவை இல்லீங்க! பேசாமே உங்க பிள்ளையைக் கூப்பிட்டு இரண்டு மிரட்டு மிரட்டுனீங்கன்னு, அவரு தன்னைப் போலே உங்க வழிக்கு வந்துடு வாருங்க!''

"ஐயயோ! என் பிள்ளையை மிரட்டுறதாவது! கேவலம் இந்த எம்.எல்.ஏ. பதவிக்காகவா மிரட்டுற துங்க? இதுவரைக்கும் அவனை நான் மிரட்டினதே கிடையாது. மிரட்டும் வகையிலே அவன் நடந்து கிட்டதும் இல்லே! இப்போ போய் ஒரு காரணமும் இல்லாமே எப்படிங்க அவனை மிரட்டுறது?''

"ஐயயோ, நிசமாவா நீங்க மிரட்டப்போறீங்க! சும்மா ஒரு பாவலா தானே இது எல்லாம்! இந்தப் பக்கத்திலே உங்களை நம்பித் தான் காங்கிரசே இருக்குதுங்க. கையை விரிச்சுடாதீங்க! உங்கள் பிள்ளையை நிறுத்தறதுக்கு முடிஞ்ச மட்டும் பாருங்க!''

"அவன் இணங்காட்டிப்போனா?''

"என்னங்க இப்படிப் பேசறீங்க? எப்படியாவது அவரை இணங்க வைக்கிறது உங்க பொறுப்பு. அப்படியே அவரு இணங்கலேன்னு இருக்கவே இருக்கிறீங்க—நீங்க!''

உள்ளே முருகேசனார் பதில் பேசாமல் நின்றார். உரையாடிய காங்கிரசார்கள் எழுந்தனர். "சரி வருகிறோம். மறந்துடாதீங்க. கலங்கிடாதீங்க! வணக்கம்!'' என்று விடை பெற்றுக்கொண்டு வெளியேறினர்.

வாசு உள்ளே சென்றான். அவன் வருவதைக்கூடக் கவனிக்காதவர் போல கையிலொரு புத்தகத்தை வைத்துக்கொண்டு, அதில் ஆழ்ந்திருப்பவர்போல் காட்டிக்கொண்டிருந்தார் முருகேசனார். சிறிது நேரம் ஆயிற்று. உள்ளே சென்ற வாசு திரும்பவும் வெளியே வந்தான். அவன் வாயிற்படியைத் தாண்டி வெளியேறிக்கொண்டிருக்கும்போது முருகேசனார் பின்னாலிருந்து அழைத்தார்.

"என்னடா தம்பி, சாப்பிடக்கூட இல்லையா? வந்ததும் வராததுமாக உடனே கிளம்பிட்டியே! எங்கே போறே?''

"எங்கேயும் இல்லேப்பா'' என்று திரும்பி நின்றான் வாசு.

"இதோ, இந்தப் புத்தகத்தைப் பார்த்தியா?'' என்று தாம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் காட்டினார் முருகேசனார்.

அந்தப் புத்தகம் அவரைப்பார்க்க வந்திருந்த காங்கிரசுக்காரர் கையோடு கொண்டுவந்திருந்த புத்தகம். வேண்டுமென்றோ, அல்லது மறந்தோ அந்தப் புத்தகத்தை விட்டு விட்டுச் சென்றிருந்தனர். அதை எடுத்துப் புரட்டிய முருகேசனார் தம் பிள்ளையை மடக்குவதற்கென்று சில செய்திகள் அங்கே இருப்பதாக எண்ணினார்.

"ஓ, இதுவா! இது ஒரு மாதம் இரு முறை வெளியீடு இரண்டுங்கெட்டான் பத்திரிகை!'' என்றான் வாசு அருகில் வந்து அதைப் பார்த்து விட்டு.

"இதிலே ஒரு கதாசிரியர் தொடர் கதை ஒண்ணு எழுதுகிறார் பார்த்தியா?''

வாசு புத்தகத்தைக் கையில் வாங்கினான். குறிப்பிட்ட அந்தத் தொடர் கதை இருந்த பகுதியைப் புரட்டினான். "இந்தக் கதையைத்தானே சொல்கிறீர்கள்?'' என்று கேட்டு விட்டுத் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான் அவன்.

"நீங்கள் எல்லாம் அறிவுப்பணி அறிவுப்பணி என்று சொல்லிக் கிட்டுத் திரிகிறீங்களே, அதுக்குச் சரியான சூடு கொடுத்திருக்கிறார் பார்த்தியா இந்த ஆசிரியர்!—'நாட்டிலே உள்ள மக்கள் எல்லாம் இதுவரை அறிவுகெட்டவர்களாகத்தானா இருந்தார்களா? அவர்களுக்கு இப்போது தான் புதிதாக நீங்கள் அறிவுபுகட்டப் போகிறீர்களா?' என்று அவர் கேட்கின்றாரே, அதுக்கு நீங்கசொல்லப்போற பதில் என்ன?''

"அதுக்கு என்ன சொல்லக் கிடக்குது? — அந்த ஆசிரியர் எந்தத் தமிழைக்கொண்டு உயிர் வாழ்கின்றாரோ, அந்தத் தமிழையே அழிக்கும் பகையாகவந்து — அதுவும் தமிழர் விழிப்பெய்திவிட்டார் என்று மூலைமுடுக்குகள் எல்லாம் முழக்கப்பட்டுவரும் இந்தக் காலத்தில்—'வாரீர் தமிழ்ப்பற்றுள்ளோரே, தமிழ் ஆசிரியமாரே, புலவர்களே வாரீர்! உம்மையெல்லாம் இழித்துப் பழித்துப் பேசுவதே என்வேலை பாரீர்! என்னை என்ன செய்துவிடுவீர் கூறீர்!' என்று சவால்விட்டுக் கொண்டு நிற்கிறார். அவருடைய ஆற்றுமைக்காக, அறியாமைக்காக வருந்துவதைத் தவிர வேறு என்ன சொல்லக்கிடக்குது? வேறு என்ன செய்யக்கிடக்குது? அவர் தமிழைச் சாடுவதைப்போல், தமிழறிஞரைச் சாடுவதைப்போல் அறிவையும் சாடுகிறார்!

"அறிவு என்பது சாதாரணமாக எல்லா உயிர்களுக்கும் இருக்கிறது. மாந்தரில் கூட மூடர்களுக்கும் அறிவு இருக்கிறது; பித்தர்களுக்கும் அறிவு இருக்கிறது. 'நெருப்புச் சுடும்', இது குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். ஆடு, மாடு, நாய்கள், பன்றிகள் கூட அறியும். இதுவும் அறிவுதான். 'பொய்சொல்லக் கூடாது' இதை மூடனும் அறிவான். இவையெல்லாம் உயிரினம் அறிந்து கொள்ளத்தக்கச் சராசரி அறிவுகள்!''

"அதைக்கூடத்தானே அந்த ஆசிரியர் சொல்றாரு. 'எல்லா உயிர்களுக்கும் அறிவு உண்டு. அவரவர்களுக்கு உள்ள அறிவைக்கொண்டு அவரவர்கள் பிழைத்துக்கொள்வார்கள். மற்றவர்கள் அதற்காக அக்கறை காட்டவேண்டாம் என்று விளக்கமாகவும் சொல்றாரே!''

"நல்ல விளக்கம் இது! யாரோ ஒரு கேள்விபதில் மேதாவி சொல்லியிருக்கிறாரே — இன்னம் ஒரு ஐந்தாண்டுக்காலம், அரசைப்பற்றியோ அது புரியும் ஆட்சியைப்பற்றியோ, அந்த ஆட்சியில் உள்ள அலங்கோலத்தைப்பற்றியோ, அல்லது மக்களைப்பற்றியோ யாரும் வாய் திறக்காமலிருந்தால் எல்லா நிலையும், எல்லார் நிலையும் ஒரு ஒழுங்குக்கு வந்துவிடும். மக்கள் துன்பமில்லாத நல்வாழ்வை எய்திவிடுவார்கள்' என்று; அந்த மேதாவியின் மூளைக்கும் இந்தக் கதாசிரியரின் மூளைக்கும் கொஞ்சங்கூட வேறுபாடு இருக்கமுடியாது. இரண்டு மூளைகளையும் இப்போதே காப்பீடு செய்து வைத்துவிட வேண்டும்!

"நாங்கள் அறிவுப்பணி என்று சொல்லும்போது நான் முன்னே சொன்னேனே, அந்தச் சராசரி அறிவுக்கு மேம்பட்டதைச் சுட்டிக் காட்டித்தான் சொல்கிறோம். அறிவு என்றசொல்லின் உயர்ந்த கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் சொல்கிறோம். மூளையின் கூரிய தன்மையோடுகூட உள்ளத்தின் கனிந்த பெற்றியையும் சேர்த்துப் பார்க்கும் ஒரு உயரிய செயல்முறையைக் குறியாகவைத்துக்கொண்டு சொல்கிறோம். அறிவுத் தெளிவின் ஏற்றத்தோடுகூட, ஒழுக்கம் எனும் உயர்ந்த செயல் முறையும் சேர்ந்து நிற்கும் நல்ல பான்மையை நோக்

கத்தில் வைத்துக்கொண்டுசொல்லு கிருேம்.''

"வள்ளுவரைவிடவா நீங்கள் சிறப்பாக இதைச் சொல்லிவிடுவீர்கள்? என்று அதுவும் கேட்கின்ருரே!''

"இங்கே வள்ளுவரை இழுக்க வேண்டாம்! அவரை அடியொற்றித் தான் எங்களின் ஒவ்வொரு செயலும் அமைந்திருக்கின்றது. எங்கள் அறிவுப்பணி வீட்டோடு பழகும் குடும்ப வாழ்க்கைக்காக மட்டுமல்ல. நாட்டோடு, உலகோடு புரியும் நல்ல பல செயல்களுக்காகவும். எங்கள் அறிவுப்பணி அரசியல் விழிப்புணர்வைத் தூண்டிவிடும் அறிவுப்பணி. எங்கள் அறிவுப் பணி விஞ்ஞானச் செய்திகளில் நாட்டங்கொள்ளத் தூண்டிவிடும் அறிவுப் பணி; வரலாற்றைப் புரட்டிப் பார், பார்!' என்று உரக்கக் கூறி உள்ளத்தில் பதியவைக்கும் அறிவுப் பணி. இவற்றையெல்லாம் புரிந்துகொள்ளாமல் 'இதுவரை எல்லாரும் அறிவில்லாமற் கிடந்தார்கள். இப்போது இவர்கள்தான் வந்து அறிவுபுகட்டப் போகிருர்களோ?' என்று முரட்டுத்தனமாகக் கேட்பது அறிவுக்குப் பொருத்தமாகவா தெரிகிறது? ஒழுக்கத்துக்குப் பொருத்தமாகவா தெரிகிறது? அல்லது உள்ளத்துக்குத் தான் பொருத்தமாகத் தெரிகிறதா?''

"சரி, அதுதான் போகட்டும். அநாவசியமா பேரை மாத்தி வெச்சிக்கிறதிலே என்ன நன்மையைக் காணப்போறீங்க?''

"அநாவசியம்என்ற சொல்லுக்கு, அல்லது அதன் கருத்துக்கு இங்கே இடமே கிடையாது. விரித்துச் சொல்லவேண்டுமானுல் குறிப்பிட்ட அந்த ஆள் ஒரு பத்தாம் பசலி என்றுதான் சொல்லவேண்டும். அந்தப் பத்தாம் பசலித் தனத்தோடு மடைமையும், ஆற்ருமையும் கலந்துகொண்டு கிடக்கின்றன. அதனுல் அவருக்கு அவசியம் எல்லாம் அநாவசியமாகத் தென்படுகின்றன. இல்லாவிட்டால், — எழுத்தறிவில்லாத தமிழர்கூட இன்று ஜலம் என்பதையும், நமஸ்காரம் என்பதையும் தமிழ் அல்ல என்று புரிந்துகொண்டு ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். அப்படி ஒதுக்கித் தள்ளப்பட்ட சொற்களை வேண்டுமென்றே, பிடிவாதமாகப் பயன்படுத்திக்கொண்டே போவரா அந்தக் கதையாசிரியர்?

"தங்கள் பெயரைச் சிலர் தனித் தமிழில் மாற்றிவைத்துக்கொள்கிருர்கள் என்ருல், அதற்குக் காரணம் மொழிப்பற்று ஒன்றேதான். பொதுவாக எல்லாரும் இதை உணர்ந்து தான் இருக்கிருர்கள். ஆனுல், சிலர் இந்த மொழிப்பற்றைப் பார்த்து எள்ளிநகையாடுகிருர்கள் என்ருல், அதற்கு ஒரு காரணம், தங்கள் பெயரைத் தனித் தமிழாக்கிக் கொண்டிருக்கும் சிலர்மீது அவ்வகையார் கொண்டிருக்கும் தனிப்பட்ட வெறுப்பு. மற்ருெரு காரணம், தூய தமிழ்மீது காழ்ப்புக்கொண்டு மணிப்பிரவாளத்தை விரும்புகின்ற தொரு பயனற்ற வெட்டிப்போக்கு. மொழியைப்பற்றி எந்த அறிவும் இல்லாத பாமர நிலையில் உள்ள சிலர்கூடத் தங்கள் பெயரை இப்படித் தூய தமிழில் மாற்றிவைத்துக் கொண்டிருக்கலாம். அதுவெறும் பகட்டுக்காகக்கூட இருக்கலாம். அவ்வகைப் போக்கு, குருட்டுப் போக்குத்தான். என்ருலும் அது பயன் விளையும், குருட்டுப் போக்கு. அறிவறிந்தோர் ஊக்கிப் பெருமை காண வேண்டிய குருட்டுப் போக்கு. அதில் உள்ள நன்மை கருதி, பயன் கருதி அதைப் போற்றுவதே நல்லவர்கள், அறிவு உள்ளவர்களின் சால்பு. விவரம் தெரிந்தோர் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சிலர் மற்றவற்றை மறந்து எள்ளும் தொழிலில் மட்டும் ஈடுபட்டிருக்கின்ருர்கள் என்ருல்,—அவர்கள் அந்தப் பாமரரைப் பார்த்து எள்ளவில்லை. உள்ளது உள்ளபடி உய்த்துணர்ந்து பார்த்துத் தங்கள் மேலான கருத்தை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டுமென்ற நல்லநோக்கத்தோடு, தங்கள் பெயரைத் தூய தமிழில் மாற்றிக்கொண்டிருக்கின்ருர்களே பெரியவர்கள், — அந்தப் பெரியவர்களைப் பார்த்துத்தான் எள்ளுகின்ருர்கள். அதோடுகூட, இப்படியெல்லாம் நல்லறிஞரை எள்ளி இகழ்வதே இந்தக் கதையின் போக்காகக்கொண்டு எழுதிக் கொண்டு போகின்ருரே இந்த ஆசிரியர்—இந்தக் கதையை முதலிலிருந்து நன்ருகப் படித்துப் பாருங்கள்—இவர் நோக்கத்தின் பெரும் பங்கு தமிழறிஞரை தமிழ்ப்பற்றுள்ளோரை — அதிலும் தமிழகத்தில் நல்ல பல நூல்களை, நல்ல, தூய, தனித்தமிழில் இயற்றிக் காட்டித் தமிழர்தம் உள்ளத்தில் எல்லாம் குடிபுகுந்திருக்கும் பெரியார்ஒருவரை ஏனே, எதற்கோ மனங்கொண்ட மட்டும் சாடிச்சாடி எழுத வேண்டும் என்பதே என்று நன்ருகப் புலப்படும்!''

"ஏன், இவர் உங்கள் திராவிட நாடு கொள்கையைப்பற்றிக்கூடத் தான் சாடி எழுதுகிருர். திராவிட நாடு, திராவிடநாடு என்று சொல்லித் திரிபவர்கள் எல்லாம் வேலையில்லாமல் சுற்றித் திரிபவர்கள்; திராவிடநாடு கிடைத்தால்தான் எல்லாம் கிடைக்கும் என்று சோம்பிக் கிடப்பவர்கள் என்று கூறுகின்ருரே, இதற்கு என்ன சொல்லப் போகிருய்?''

"கண்ணெதிரில் நிகழ்வதைப் பார்க்க விரும்பாமல் கண்களை இறுக மூடிக்கொண்டு, கருத்தை மட்டும் கூற விரும்பும் கருத்துக் குருடர்கள் இவர்கள். கருத்தைக் கூறுவதற்கு முன்னே அத்தகையோர் தங்கள் கண்களையும் சற்றே திறந்து பார்க்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் புரிந்து கொள்ள முடியும். 'திராவிடநாடு' கொள்கையில் மாருத ஈடுபாடு கொண்டிருப்போரும், அதற்காகச் செயலாற்றிக் கொண்டிருப்போரும் நன்கு கற்றவர்கள்; விவரம் அறிந்தவர்கள்; — அவற்ருேடுகூட அவர்கள் எல்லாம் உண்மையான பாட்டாளிகள்; கபடமற்ற உழைப்பாளர்கள். இதைத் தவிர வேறு எதையும் இதைப்பற்றி அவர்களுக்கு நான் சொல்வதற்கில்லை.''

"என்னமோ போ! உன் கட்சியைப்பற்றி நீயே குறைத்துப் பேசுவியா! எதிரி உன் எதிரில் இல்லே. அதனுல் நீ சண்டப்பிரசண்டனுகப் பேசுகிறே! எதிரியும் எதிரிலிருந்து அவனுடன் வாதமிட்டுப் பேசினுல் அல்லவா உன் வண்டவாளம் தெரியும்.''

"வரத்தான் சொல்லுங்களேன் வாதாட வல்லவரை! நான் சொல்வதில் — எங்கள் கொள்கையில் — ஏதேனும் குற்றம் உண்டு என்று தலைநிமிர்ந்து சொல்லட்டும்; உள்ளத்தைத் தொட்டுக்கொண்டு சொல்லட்டுமே பார்க்கலாம்! வேறொன்றும் வேண்டாம், நான் இரண்டே இரண்டு கேள்விகள் கேட்கிறேன்—இந்தியா ஒரு நாடு என்று பேசும் எந்த வாய்சாலக்காரர் அதற்குத் தக்கவாறு பதில் சொல்லி விட்டுப் போகட்டும். பிறகு பார்க்கலாம். அந்நிய ஆதிக்கம் இல்லாத உரிமை வாழ்வு வேண்டுமென்று ஒரு நாட்டு மக்கள் கேட்பது தவறு? ஆங்கிலேயரைவிட இந்திக்காரர்கள் நம்மோடு எந்தெந்த வகையில் ஒட்டுறவு உள்ளவர்கள்?''

"கேள்வி பதில் இருக்கட்டும். நான் ஒண்ணு சொல்றேன் அதைக் கேட்கிறீயா?''

"என்ன?''

"எவ்வளவுதான் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இருந்தாலும், அதெல்லாம் நமக்குச் சோறு போட்டுவிடாது. அவங்க அவங்க பிழைக்கிற வழியைப் பார்க்கிறதுதான் நல்லது.''

வாசு தன் தந்தையை மௌனமாக நிமிர்ந்து பார்த்தான். அவர் பேச்சில் திடீரென்று ஏற்பட்ட பூடகமான திருப்பம் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தவில்லை. அவர் என்ன சொல்லப்போகிறார் என்பதுதான் அவனுக்கு முன்கூட்டியே தெரியுமே!

"இதோ பார், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மக்கள் நலம் — இப்படிப் பேசித்திரிகின்றவர்கள் எல்லாம் யார் தெரியுமா?'' என்று ஒரு கேள்வியைப்போட்டுவிட்டு, அதற்கு வாசு என்ன சொல்லப்போகிறான் என்பதை ஆராய்பவர்போல் முருகேசனார் அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினார். வாசுவோ நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள் என்ற பெரும்போக்கில், வாய் திறவாமல் தன்பாட்டில் இருந்தான்.

"பிழைக்கத் தெரியாதவர்கள், வறுமையிலும் வாட்டத்திலுமே நாளைக் கடத்தவேண்டியவர்கள்தான் இப்படியெல்லாம் பேசித்திரிய வேண்டும்.''

அதற்கும் வாசு வாய் திறக்கவில்லை. இன்னும் தன் தந்தை என்ன சொல்லப்போகிறார் என்று பார்க்க விரும்புகின்றவன்போல் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"நீ ஒண்ணும் அப்படிப்பிழைக்கத் தெரியாதவனில்லே. சோம்பல் என்றாலே, உனக்கு என்னவென்று தெரியாது. நம்முடைய செல்வமும், நம்முடைய செல்வாக்கும் மேலும் பெருகுவதை நீ விரும்பாமலிருக்க முடியாது. இனியும் அவை பெருக வேணுமென்றால், அவை உன்னைக் கொண்டுதான் பெருகவேணும். நீயே முன்னின்று பெருக்குவதற்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் வந்திருக்குது. அந்தச் சந்தர்ப்பத்தை நாம் நழுவ விட்டுவிடக் கூடாது. அப்படி நாம் நழுவ விட்டுவிட்டால் வலிய வந்த சீதேவியைக் காலால் உதைத்துத்தள்ளியது மாதிரியாகும். இந்தத் தேர்தலில்....''

கடைசியாகச் சொல்லவந்த சொற்களை முடிக்காமலே தன் மகனை உற்றுநோக்கினார் முருகேசனார். எவ்வித முகமாற்றத்தையும் காட்டாமல் அப்படியே அமர்ந்திருந்த வாசு தன் தந்தை முடிவாகச் சொல்லவேண்டியதை, முக்கியமாகச் சொல்லவேண்டியதை முடிக்காமலே நிறுத்திவிட்டதைப் பார்த்ததும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான். அவன் பேச்சில் பரபரப்பு இல்லை. படபடப்பு இல்லை. அமைதியாக ஒவ்வொரு சொல்லையும் அளந்து, அளந்து, அழுத்தி, அழுத்திக் கூறினான்.

"இந்தத் தேர்தலிலே நான் நிற்க வேணடும். அதிகார வட்டாரத்தின் சலுகையோடு, துணையோடு நிற்க வேண்டும். கதர்க்குல்லாய்களின் ஆதரவோடு, புதியதொரு கதர்க்குல்லாயாக மாறிக்கொண்டு நிற்க வேண்டும். அதற்கு நான் இதுவரை கூறிவந்துள்ள சீர்திருத்தக் கருத்துக்களையும், அவற்றின் மூலம் பெற்றுள்ள செல்வாக்கையும் பயன்படுத்தவேண்டும். அப்படித்தானே அப்பா?''

"ஆமாம் அப்படித்தான். அதுவேதான். உனக்குத் தெரியாதா என்ன?''

"அப்பா, — தன் வீட்டில் அடுப்பெரிக்க விறகு இல்லை என்பதற்காக யாராவது தன் வீட்டுக்கூரையைத் தாங்கிக்கொண்டிருக்கும் குறுக்குச் சட்டங்களையும், மேல்விட்டத்தையும் பிளந்து அடுப்பெரிப்பார்களா அப்பா?''

கனிந்த குரலில் தன் கேள்வியைப் போட்டுவிட்டுச் சற்று நிறுத்தித் தன் தந்தையின் முகத்தை ஏறிட்டு நோக்கிவிட்டுப் பின்னும் பேசினான் வாசு.

"இன்றைய அந்நிய ஆதிக்கத்தை நாம் இந்த நாட்டில் உலவ விட்டுக்கொண்டு வேடிக்கை பார்த்திருப்பதே பெருந்தவறு. நாமே நம் கையால் கன்றுகள் ஊன்றி, அருமையாகப் பாதுகாத்துப் பேணி வளர்த்த மாந்தோட்டத்தையும், மாதுளந்தோட்டத்தையும் மதயானைகள் வந்து அழித்துச் சிதைத்து, மரங்களை முறித்துப்போட்டுக் கொண்டிருக்கும்போது நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கலாமா அப்பா?—வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது போதாதென்று நம் செல்வத்தை, நம் உழைப்பை நாசப்படுத்திக்கொண்டிருக்கும் அந்த மதயானைகளுக்குச் சீப்புச் சீப்பாக வாழைப்பழத்தைக் கொண்டுவந்து பரிசாகக் கொடுக்க முன்வரலாமா அப்பா?—கொடுத்த பழங்களை அந்த யானைகள் சுவைத்துச் சுவைத்து உண்டுகொண்டிருக்கும்போது—அந்த யானைகள் முறித்துப்போட்ட, ஒடித்துப்போட்ட மரங்களிலிருந்து தெறித்து விழுந்த மாம்பிஞ்சுகளையும், மாதுளைகளையும் பொறுக்கிச் சேர்த்து, அதை மற்றவர்களிடம் காட்டி 'பார் இதோ, எனக்குக் கிடைத்த பரிசு' என்று பெருமைபட்டுக்கொள்ள முடியுமா அப்பா?''

"நீ சொல்வது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மத யானைக்கும், மாந்தோட்டத்துக்கும், நீ எம்.எல்.ஏ.யாக நிற்கப் போவதற்கும் என்ன சம்மந்தம்?''

"இன்று நம் திருநாட்டை அடிமைக் காடாக்கி டெல்லி ஏகாதிபத்தியம் ஆதிக்க வெறியோடு ஆணவ ஆட்சி புரிகிறது. அந்த மமதை ஆட்சி அவர்கள் வைத்த சட்டப்படி இங்கே நடைபெறுவதற்கு இங்கே துரோகிகளும், கைக்கூலிக்காக எதையும் செய்ய, எதையும் சொல்லச் சித்தமாக இருக்கிறார்கள். அதன் மூலம் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஏகாதிபத்தியமோ பணத்தைக் காட்டி, பதவியைக் காட்டி, அடித்து மிரட்டி எல்லாரையும் தன் வலையில் வீழ்த்திவிடலாம் என்று, தான்தோன்றித்தனமாக எண்ணி ஒவ்வொன்றையும் இயற்றிக்கொண்டு போகிறது. நம் திருநாட்டை, இந்த நாட்டு மக்களை, படுபாதாளக் குழியில் வீழ்த்தும் முனைப்போடு விரைந்து போய்க்கொண்டிருக்கிறது. தந்நலத்துக்காக, அல்லது ஆற்றாமை காரணமாக இந்த நாட்டு நலத்தை, இந்த நாட்டு மக்களின் வாழ்வை, இந்த நாட்டின் எதிர்காலத்தை நாம் பலிகொடுத்துவிடக் கூடாதப்பா! மாற்றான் நம்மைப் பார்த்து வீசி எறியும் பட்டமும், பதவியும், பணமும் அவன் நம்மைப் பார்த்து வீசி எறியும் எச்சிற் காசுகள் அப்பா! அந்தப் பட்டத்துக்காக நாம் பாதகச் செயலில் ஈடுபட்டுவிடக் கூடாதப்பா! அந்தப் பதவிக்காக நம் நாட்டுக்குத் துரோகம் இழைத்துவிடக் கூடாது அப்பா! வடவர் உதவியால் நாம் எம்.எல்.ஏ. ஆவதன் மூலம், எம். பி. ஆவதன் மூலம் வடவரின் தூண்டிலில் கோக்கப்படும் புழுக்கள் ஆகிவிடுகிறோம் அப்பா நாம்! வேண்டாமப்பா அந்தப் படுபாதகச் செயல் நமக்கு!'' என்று குரல் கம்ம, உடல் பதற வேண்டுகோள் விடுத்தான் வாசு.

வாசுவின் சொல் அந்தப் பெரியவரின் செவியில் ஏறவில்லை. அவர்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

எண்ணமெல்லாம் பணத்தின்மீதும், பதவியின்மீதும் அப்போது படிந்திருந்த காரணத்தால் வாசுவின் பேச்சு அவருக்கு நல்லதாகப்படுவதைவிட, எரிச்சலை மூட்டத்தான் உதவியது. வாசு எவ்வளவுக்கெவ்வளவு உருக்கமாகப் பேசினானோ, அவ்வளக்கவ்வளவு முருகேசனார் ஆத்திரத்தோடு பேசத் தொடங்கினார். வாசு எவ்வளவுக்கெவ்வளவு அமைதியாகப் பேசினானோ முருகேசனார் அவ்வளவுக் கவ்வளவு வெறியோடு பேசத் தொடங்கினார். இவன் மகன். அவர் தந்தை.

“போதும் நிறுத்தடா! உனக்கு என்னடா தெரியும்! சின்னப் பயல்! பதவி கூடாதாம்! பட்டம் கூடாதாம்! பணம் கூடாதாம்! இன்னும் கொஞ்ச நாள் போனா உலகமே கூடாதுன்னு சொல்ல வருவே நீ! அதெல்லாம் ஒத்துக்கக்கூடிய வாதமா? படிச்சவனுக்கு மூளை குறைவுன்னு சொல்றது உன் சம்பந்தப்பட்ட வரையிலே சரியா இருக்குதுடா! எந்த எந்தச் சமயத்திலே எதை எதைச் செய்யணுமோ அதை அதைச் செய்தால் தாண்டா நாமும் நாலு பேரைப் போல வாழ முடியும்!

இந்த இடத்தில் திடீரென்று இடைமறித்தான வாசு. அவனுக்கும் ஆத்திரம் வந்துவிட்டது.

“நாலுபேரைப்போல வாழவேணும் என்பதற்காக மற்றத் தொண்ணூற்றாறு பேரையும படுபாதாளததில் தள்ளக்கூடாது அப்பா! அவர்கள் வாழ்வைக் குலைக்கக்கூடாது அப்பா!”

“போடா போ! அறிவே உனக்கு மழுங்கிப் போச்சு! நாலு பேரும், தொண்ணூற்றாறு பேரும்! உன் கிட்டே வீண் வாதம் எதுக்கு! பேசாமே நான் சொல்றதை நீ கேட்கிறீயா, இல்லையா? சொல்லு பட்டென்று! இப்போதே இரண்டிலே ஒண்ணு தீர்ந்து போகட்டும்!”

“இப்படிக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேனப்பா?”

“இல்லை, சொல்லித்தான் ஆக வேணும்!”

“நீங்கள் பிடிவாதமாகப் பேசுகிறீர்கள். உங்களிடம் வாய்திறந்து சொல்லக்கூடாது என்பதுதான் என் எண்ணம். ஆனால் நீங்கள் என்னை விடமாட்டீர்கள் போலிருக்கிறது! — எந்தக் காரணத்தைக் கொண்டும் நாட்டுக்குத் தீமை பயக்கும் ஒரு செயலை நான் புரியமாட்டேன். அப்பா! நான் நாட்டைக் காட்டிக்கொடுத்து அதன் மூலம் பதவியோ, பட்டமோ பெற விரும்பவில்லை அப்பா!”

“உறுதியாகத்தான் சொல்கின்றாயா?”

“உறுதி! உறுதி! உறுதி! இதுதான் என் அறுதியப்பா!”

வாசு அங்கு நிற்கவில்லை விசுக்கென்று அவ்விடமிருந்து வெளியேறிப் போய்விட்டான். முருகேசனாரோ வாசுவின் குரலில் ஒலித்த திண்மையைக் கண்டு திகைத்து நின்றார். அப்படியே நெடுநேரம் நின்றுவிட்டார்.

(தொடரும்)

துயிலாக் கண்கள்

—[நா. நாராயணன்]—

இந்தக் கண்கள் இருக்கின்றனவே? அவைகளுக்குள்ள ஆற்றல் உலகில் வேறு எவற்றாலும் பெற முடியாதது. ஆனாலும் அவை எவற்றைக் காட்டிலும் அதிகத் துன்பத்தை அடைகின்றன.

“நோய் நோக்கு விழியாகி, பின் அந் நோய் நீக்கும் மருந்தும் ஆகும்” பெண்களின் கண்களைப் பற்றி வள்ளுவர் நிரம்பப் பாடியிருக்கிறார்.

காதல் கொண்டவன், “தான் நோக்கும் காலை நிலம் நோக்கி, நோக்காக்கால் அவன் முகம் நோக்கி மெல்ல நகும்” சேல் விழிகள் இன்ப இலக்கியத்தின் நுழைவாயில்.

கண்ணோடு கண்ணினை நோக்குகின்ற நோக்கிலே பிறக்கின்ற ஆயிரமாயிரம் காதல் இலக்கியங்களைத் தமிழ்க் கவிஞர்கள் வருணிக்கின்ற போது நாமும் அக் கண்கள் பெற்ற பயனை அடையமாட்டோமா? என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

“வருவார் கொழுநர்” எனத் திறந்தும், “லாரார் கொழுநர்” என அடைத்தும், திருகும் குடுமி விடி அளவும் தேய்கின்றவரை அடைத்தும், திறந்தும் காதலன் வருவழி நோக்கி இருவிழி திறக்கும் கலிங்கத்துப் பரணி காட்டும் காதலியை நினைக்கின்றபோது “விழிகளே வாழ்க! வாழ்க!!” என்றுதான் வாழ்த்தத் தோன்றுகிறது.

பிரிவுக் காலத்தில் ஏக்கத்தால் தூக்கம் மறந்து விழித்திருந்த தலைவிக்கு ஒரே மகிழ்ச்சி. காலம் குறித்துச் சென்றவன் காண வந்திருக்கிறான்; இருக்காதோ பின்னே? இனி அவள் உறங்காக் கண்களுக்கு நிம்மதி.

அணைப்பில் தனைமறந்து, அன்பின் நிலை உணர்ந்து நிற்கும் அவளுக்கு; மகிழ்ச்சியும், இன்பக் கிறக்கமும், அவளது துயிலாக் கண்களுக்கு உறக்கமும் தேவைதானே?

அவன் அகன்ற மார்பிலே அவள் முகம் புதைப்பாள். அவள் கண்கள் மெய்மறந்த இன்பப் போதையிலே தன்னையறியாது மூடிக்கொள்ளும் என்று நாம் எண்ணுவதில் வியப்பில்லைதான்!

ஆனால், ஐயகோ! என்ன இது? மூடிக்கிடக்க வேண்டிய கண்கள், அவன் நெஞ்சத்தை ஊடிப் பாய்கின்றனவே? அவன் அழகுடலில் ஓடித் திளைக்கின்றனவே?

சேரவந்தவன் மீண்டும் பிரிந்துவிடுவான் என்றெண்ணி வருந்துகின்றனவோ;

இத்தனை நாளும் பிரிவின் ஏக்கத்தால் வாடி இருந்த அவை, கண்ணை இமையாது விழுங்கி ஏக்கம் போக்கின்றனவோ?

இனிப் பிரிந்துவிட்டால் அவனைக் காணமுடியாது என்ற எண்ணத்தால் உறக்கம் துறந்து அவன் உருவையும் திருவையும் பருகுகின்றனவோ?

“புல்லிக் கிடந்தோர் புடைபெயர அவ்வளவில் அள்ளிக்கொள்ளும் பசலை” நோயை நன்கு அறிந்த காரணத்தால் இமைக்காது அவள் எழில் பருகித் தன் எண்ணத்தை நிறைவேற்றுகிறாளோ?

“ஒருநாள் பருகுவன் பைதல்நோய் எல்லாம் கெட” என்ற சங்ககால காதலியைப்போல பார்க்காத நேரத்திற்கெல்லாம் பார்வையுண்டாக்கிப் பசியாறப் பார்த்துண்டு பயனடைகிறாளோ?

பிரிந்த ஞான்றும் துயிலாது, பின்னர் சேர்ந்த ஞான்றும் உறங்கா அவள் கண்கள் அடையும் துன்பம் கடலினும் பெரிது என்கிறார் பொய்யாமொழி உரைத்த பொய்யில் புலவன்.

அதனை முழுதும் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை.

“வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயி[டை]
ஆரஞர் உற்றன கண்” -குறள்-கற்பிய[ல்]

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, “திராவிட நாடு” அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.